

# பொங்கல் மலர்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு




## ஜப்பான் வாழ் தமிழ் மக்களின் பொங்கல் விழா

## 2012

# PAINTING Mansi 11 years

## Abstract




## Warli Painting





# தலையங்கம்

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள்
இறைவா ! இறைவா ! இறைவா !.. (ஓ - எத்தனை)

முக்தியென் றொருநிலை சமைத்தாய் - அங்கு
முழுதினையு முணரு முணர் வமைத்தாய்
பக்தி யென்றொரு நிலை வகுத்தாய் எங்கள்
பரமா! பரமா! பரமா! (ஓ - எத்தனை)

அமர கவி

ஜப்பானில் வாழும் தமிழ் நன்மக்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் 2012**ஆம்** ஆண்டுக்கான பொங்கல் மலரை உங்கள் பேராதரவோடு சமர்ப்பிப்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

ஒரு வழியாக ஆண்டு 2011 போய்ச்சேர்ந்ததே என்று ஆயாசமாக இருக்கிறது. அப்படி உலகையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டுத்தான் போயிருக்கிறது. கடந்த ஆண்டில்தான் எத்தனை நிகழ்வுகள், சோதனைகள், துயரங்கள், கொடுமைகள், உள்நாட்டுக் கலவரங்கள், புரட்சி வெடிப்புகள், மக்கள் எதிர்ப்பு இயக்கங்கள், போதாக்குறைக்கு இயற்கை சீற்றங்கள். அணுஉலை விபத்துக்கள் வேறு. இவற்றின் விளைவாக ஏற்பட்ட பேரழிவுகள் சம்பந்தப்பட்ட நாடுகளில், பொருளாதார வீழ்ச்சியும், பணவீக்கங்களும் அதன் நேரடி விளைவான விலைவாசி உயர்வும், இன்னபிற சோதனைகளும் சாமானிய மனிதனின் வாழ்வைப் புரட்டிப்போட்டு ஒரு கேலிச்சித்திரமாக மாற்றிவிட்டது. பல்வேறு நாடுகளில் உருண்ட தலைகள் பல. உருவாகிய மாற்றங்கள் பல. மயக்கங்களும், மாற்றங்களும், அதிர்வுகளும், ஆரவாரங்களும் எந்த நாட்டையும், பிரதேசத்தையும் விட்டுவைத்ததாகத் தெரியவில்லை. உலகே, ஒரேயடியாகக் குதிக்காதே, நிதானமாக இரு என்பதுபோல், இந்த உலகின் தலையில் ஒரு குட்டு வைத்து விட்டுப் போயிருக்கிறது 2011 !

கடந்த ஆண்டின் நிகழ்வுகளிலிருந்து பாடங்கள் பல கற்போம். தவறுகள் நிகழ்ந்திருப்பின் அவற்றை உடனடியாகத் திருத்திக்கொண்டு, நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்குவோம். வந்திருக்கும் புத்தாண்டும் போகிப் பொங்கலும் வரவேற்கத்தக்க நல்ல மாற்றங்களை அனைத்து விதமான மக்களுக்காகவும் உலகெங்கும் கொண்டுவரும் என நம்புவோம். இறைவனின் இன்னருளால், நம்நாட்டிலும், உலகின் மற்ற பகுதிகளிலும் பொருளாதார முன்னேற்றமும், அரசியல், சமூக அமைதியும், சாதாரண மக்களின் வாழ்வில் உயர்வும், மேன்மையும் நிலவட்டும். மனிதனின் சிந்தனையும், திட்டங்களும், செயல்பாடும் மனிதகுல மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்திற்கும், உலக அமைதிக்கும் வழிவகுப்பதாய் அமையட்டும். நாம் வாழும் இந்த மாபெரும் உலகின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து, மனித உணர்வுகளை மதித்து, நம்மோடு சேர்ந்துவாழப் படைக்கப்பட்டிருக்கும் அனைத்து உயிர்களையும் நேசித்து, பாதுகாப்பளித்து, இயற்கையோடு இசைந்த, இணைந்த வாழ்வு வாழ நாம் ஆசீர்வதிக்கப்படுவோமாக !

**அனைவருக்கும் மனமார்ந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள் !!!**

# Drive Your BMW

**Lakshmi Narayanan V**

## Namaskaram.

### Congrats!!

You have got a unique BMW.

Yes, you have a BMW. I too have one. Each and every one of us has our own BMW.

### B - Body

Our body is slowly accumulated to this size from our birth. We were not this big when we were born, right? The Sweet Pongal you had in the Pongal 2012 has now been converted into a human flesh and blood etc. All that food we consumed has been nourished this body for all these years. This body has certain kind of intelligence to digest whatever we stuff in. We are given 5 sense organs. It is given for our survival purpose. Please see, our eyes don't see, ears don't hear, nose doesn't smell. The signals are sent to brain. There is someone/something else which sees, hears. The eyes and ears nose are just instruments.

What you have accumulated can be ours but cannot be you. **This body is yours but this body is not You.**

### M - Mind

Where body is an accumulation of food, mind is an accumulation of knowledge. It gathers everything we come across in our life. From the day we born, till now, everything gets recorded. We really don't have a choice to allow something to stick-in and something not to stick-in.

We have taken many decisions in our life. We thought this is the best option/thing to do. Few weeks/months/years later we think that what we decided earlier is not correct. The mind throws random thoughts. There is no continuity as well. If you closely watch, there is not relation between one thought and another thought. It just keeps jumping. Is mind a bad tool? No, it is not. It's a very powerful tool but we don't use it to its fullest potential. We use it for petty things.

Our thoughts are restricted to this collection of knowledge. We cannot think anything beyond what is in our knowledge box. This pattern has now established as a 'Personality' -- in other words 'list of likes and dislikes'. Between two human beings, the difference is this Likes and Dislikes. What you like, how much you like, when you like, why you like – this combination forms a personality and that's the difference between you and another human.

Personality is need till a certain stage. After that, we need to get another tool and drop this unconsciously created personality. Bringing in the awareness is the way. It is fine, if you act in a drama as a Hanuman but if you don't wish to remove that costume and behave like human, people will think you are a mad. If you have sufficient awareness, you can create a new personality. You can opt to behave in each moment, in the way you wanted, in the way it is needed. This is true freedom, isn't it?

This mind is yours but this mind is not You.

### W - World

Using our Body and Mind, we have consciously or unconsciously created our own world. Whatever we

have experienced in our life has formed a world of our own. The happiness, love, bliss, hate, anger etc. are part and parcel of our world. What we have experienced in life is very unique. The other person will have his/her own cocktail of so many hundreds of emotions, which makes their world so unique.

Do you accept that you find it difficult to communicate something to even our dear ones? If not always, at least a few times, we must have gone thru such situations in our life. We are trying to send a message (from our world) to another person's world. Most of the messages are delivered & interpreted correctly and some are not well received and/or interpreted. This is due to the meaning; emotion attached to that sound in other world is not same as in our world.

**B M W**

We all want to be happy. Whatever action we do, is in pursuit of happiness. Please see this. We don't do anything that doesn't bring happiness to us but we are not feeling happiness always. Actually, nobody can steal our happiness or bliss from us unless we help. We allow others to use our own hands to hurt us but we blame others.

Let us all learn to drive our BMW to best of our capability.

To bring this BMW into your experience, I suggest you to take up this FREE online program called Isha Kriya at http://www.ishafoundation.org/Ishakriya

Do you mind allocating 12 minutes for your own well being?

You need not stop whatever you are doing right now.

Let us take the driver seat. Let us drive it to our destiny.

**Pranam,**

# Peace on Earth

---by Riddhi (Age: 8 years)

Peace on Earth is everywhere,
You just can't see it, it's in the air,
You really have to look deep in it,
Then you will find a Joyful Kit!

Peace on Earth never goes away,
It hasn't been missing for a single day,
Everyone has deep love in Peace,
Nobody hates it in very very ease!

Peace is never burned or never heated,
Not from a strong man ever defeated,
A good thing to do to peace is share your Love,
And to every creature, even a Dove!!!

# கவிதைகள்

## ஸ்ரீவித்யா

அன்று.. பாலூட்டி, சீராட்டி, தாலட்டியவர்கள்
இன்று.. பாவமாய், பரிதாபமாய், அனாதையாய்..
முதியோர் இல்லத்தில்!!

### பெண்மை

மகளாய், தங்கையாய், அக்காவாய், மனைவியாய்
இருக்கும் நீ...
தாயாய் ஆகும்போது... கடவுளாய் தோன்றுகிறாய்!!!
என்ன தவம் செய்தாய் பெண்ணாய் பிறப்பெடுக்க!!

### மழலை

உனக்கு ஐந்து வயது
"அம்மா சோறு" என்றாய்
பிஞ்சு மழலையில்...
சந்தோஷத்தில் திளைத்தேன்!
இப்போது உனக்கு ஐம்பது.
"தண்டசோறு" என்கிறாய்..
வேதனையில் தவிக்கிறேன்!

## நாகராஜன்

### நம் மக்கள்

கைக்காட்டி கைகூப்பியவரை
கையூட்டு பெறவைத்தவர்கள் நாம்
கைது என்றாலும் அஞ்சார் - என்
கை சுத்தமென கை கழுவியவரை
கை விரல் மை வைத்து கூட்டி சென்ற
கையிலாகாத மக்களை எத்தனை
காந்தி, ஹசாரே வந்தாலும் மாற்ற முடியாது காண்
ஏனெனில், கை நிறைய இலவசம் பெற்றே காலம்
தள்ளும்......???????

## சுவாதி ஐயர்

### அன்னை

உன்
இமை திறக்க ஒளி பிறந்ததோ...
இதழ் திறக்க இசை அமைந்ததோ
கை அசைக்க அலை திறந்ததோ
கால் நடக்க கலை வந்ததோ
உம்முயிர் ஜனிக்க புவி மலர்ந்ததால்
நீ என்ன பிறப்புகளின் பிறப்பிடமோ

### நட்பு

உன் சிரிப்பில் முத்துக்களை பார்த்தேன்
உன் கண்களில் வைரங்களை பார்த்தேன்
உன் முக பொலிவில் தங்கத்தை பார்க்க
என தோழியே நீ என்ன
நகை கடையா என்றேன்..??
உன் நட்புடன் இருக்க நகை கடை
இல்லையே.. வெறும் கூடை என்றாள்

### மழை

விண்ணையும் மண்ணையும் இணைத்து
நதியாய் கடலில் சேர்ந்து
மண்ணுக்குள் ஈரத்தை புதைத்து
பயிரெனும் உணவை வளர்க்கிறாயே
நீ உருவமில்லா மழை அல்ல
உயிருக்கு உணவூட்டும் அன்னையே...

# ஐரோப்பிய நிதி நெருக்கடி



நன்றி : thinkquest.org

உலக இலக்கியத்தில் கிரேக்க துன்பியல் நாடகங்களுக்கென்று ஒரு தனியிடம் உண்டு. ஷேக்ஸ்பியருக்கு முன்னோடியாக சோ.ஃபொக்கிள்ஸ், யூரிப்பிடிஸ் என்று நாடகங்களில் துன்பியலை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் கிரேக்கர்கள். இன்றோ அந்த நாட்டு மக்களின் வாழ்க்கையே ஒரு துன்பியல் நாடகமாக அரங்கேறிவருவது ஒரு அங்கத முரண்.

அலாஸ்காவில் தும்மினால் அம்பத்தூரில் சளி பிடிக்கும் அளவுக்கு ப்பின்னிப்பிணைந்து விட்ட உலகப்பொருளாதாரத்தில் ஒரு நாட்டில் ஏற்படுகின்ற நெருக்கடி பிற நாட்டுமக்கள் மத்தியில் ஒரு பீதியைக்கிளப்பிவிடுவது புரிந்து கொள்ளக்கூடியதே. உலக மக்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு. அப்படி என்னதான் நடக்கிறது கிரேக்க நாட்டில்? இழ்ந்த சலுகைகளுக்க்காக வீதியில் இறங்கி ப்போராடும் கிரேக்க மக்களின் அவல நிலைமை ஏற்படக்காரணம் என்ன? இத்தாலி, போர்த்துகல்லிலும் இதேபோன்ற அவலம் தொடரவது எதனால்? இதற்கான காரணத்தை அலசுவதற்கு நாம் வரலாற்றில் வெகுதூரம் பின்னோக்கி போகவேண்டியதில்லை.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கம் முதலாக, ஐரோப்பாவைப்பொறுத்தமட்டிலும் வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பது போல் ஜெர்மனி, பிரஞ்சுபோன்ற வடஐரோப்பிய நாடுகள் பொருளாதார பலம் பொருந்தியும் கிரேக்கம் போன்ற தெற்கத்திய நாடுகள் ஒப்பிட்டளவில் வசதி குறைந்தும் உள்ள நிலை தொடர்ந்துள்ளது. இந்த நூற்றாண்டின் முதல் ஏழு ஆண்டுகள் உலகப்பொருளாதாரத்தின் பாய்ச்சல் வளர்ச்சியை அடியொற்றி கிரேக்க ப்பொருளாதாரமும் ஓரளவு சீரிய வளர்ச்சியைக்கொண்டிருந்த்து. நாட்டின் முக்கிய தொழில்களான சுற்றுலாத்துறை, கப்பல்துறை முதலான் துறைகள் சிறப்பாக நடைபெற்று வர நாட்டின் பொருளாதாரம் ஆண்டுக்கு நான்கு முதல் ஐந்து விழுக்காடு விகிதம் வள்ர்ந்து வந்தது. இந்த வளர்ச்சிக்கு உந்துகோலாக கிரேக்க அரசாங்கம் பற்றாக்குறை பட்ஜெட்டையும் கடனையும் நம்பியது.

வளர்ச்சியை ஊக்குவிக்கும்பொருட்டு கடன் வாங்குவது, மளிகைக்கடை அண்ணாச்சியிலிருந்து மன்ஹட்டன் முதலாளிகள் வரை எல்லோருமே பயன்படுத்தும் ஒரு நிதி நிர்வாக உத்திதான் என்றாலும் கடன் வாங்குவதில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளிலே மிகக்கடனாளியான அரசு ஜப்பானிய அரசுதான் – ஆனால் ஜ்ப்பான் கடன்பட்டு நிற்பது உள்னாட்டு நிறுவனங்கள், தனிமனிதர்களிடம் தான். கிரேக்க அரசோ, வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்கியுள்ளது.

ஆனால் இந்த வளர்ச்சி தொடர்ந்து நீடிக்கவில்லை. நாடகங்களில் வருகினற திருப்புமுனைக்காட்சி போல் வந்திறங்கியது 2008இன் சர்வதேச நிதி நெருக்கடி. அமெரிக்காவில் மையம் கொண்ட இந்தப்புயல் உலகச்சூறாவளியாக பன்னாட்டுப்பொருளாதாரங்களையும் சூறையாடிச்சென்றது நினைவிருக்கலாம்.

வர்த்தகத்தை நம்பியிருக்கிற கப்பல்துறைக்கும், பயணிகளை நம்பியிருக்கிற சுற்றுலாத்துறைக்கும் சர்வதேச நிதி நெருக்கடி காரணமாக பலத்த அடி. இதன் விளைவாக ஏற்பட்ட் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து கிரெக்க நாடு மீண்டு வரவே முடிய்வில்லை. பொருளாதாரச்சரிவுஒரு புறம் வெளி நாட்டுக்கடன் திருப்பித்தர வேண்டிய கட்டாயம் மறுபுறம்- கிரேக்க அரசுக்கு வேறு வழி தெரியவில்லை. தனது அரசு உழியர்களுக்கு கொடுத்துவந்த சலுகைகளை வாபஸ் வாங்கி.க்கொண்டது

இந்தச்சிக்கன நடவடிக்கைகளால் அரசு மக்களிடமிருந்து அன்னிய்ப்பட்டுப்போனதுதான் மிச்சம்.. விளைவு வீதியில் மக்கள் போராட்டம். கொந்தளிப்பு.

இத்தாலி, ஸ்பெயின்போன்ற நாடுகளிலும் இதே போன்ற நிலைமைதான். யூரோவலயத்திலுள்ள நாடு, தான் வாங்கிய கடனைத்திருப்பியடைக்க முடியாமல திவாலாகிவிட்டால் யூரோ மீதுள்ள நம்பகத்தன்மை மொத்தமாகக்குறைந்து இன்னுமொரு உலகளாவிய புதிய நெருக்கடிக்கு வித்திட்டுவிடும் என்பதுதான் உலகமக்களின் அச்சம்.

க்டந்த டிசம்பர் மாத்த்தில் தாக்கல் செய்யப்பட்ட் நிதி நிலைஅறிக்கை பற்றாக்குறை குறைக்கப்பட்டிருப்பது நல்ல முயற்சி. இது போன்ற முயற்சிகளை த்தொடர்ந்து மேற்கொண்டு நெருக்கடிக்கு ஒரு முழுமையான் தீர்வைக்கொண்டு வரவேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பமும்.

**- கோவிந்த்**

**அடுத்ததாக...**

மரத்திலிருந்து எச்சமிடும்
பறவைக்குத் தெரியாது
கீழே பளபளக்கும் மனிதத்தலை
ராஜாவினுடையதா ப்ரஜையினுடையதா
தலைவனுடையதா தொண்டனுடையதா
ஞானியினுடையதா முட்டாளினுடையதா
அதற்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றுதான்
அடிச்சுமையை இறக்கிவிட்டாயிற்று
ஆகாசத்தில் எழும்பிப் பறக்கவேண்டும்

**விஜயசாரதி**


SRM Technologies
Quality. Experience. Knowledge.
www.srmtech.com
Services
• Software Development
• System Integration
• Web Services
• Mobile & Embedded Solutions
• Technology Consulting
• Project Management
• IT Training
SRM UNIVERSITY
LEARN. LEAP. LEAD
SRM
UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)
www.srmuniv.ac.in

# விஜயசாரதி கவிதைகள்

## அதுவும் இதுவும்

உடம்புக்கு ஆகிவிட்டது
கழுதைக்கு ஆவதைப்போல
மனது மட்டும் எப்போதும்
மலர்ந்து பரவும் வஸந்தமாய்
மார்க்கண்டேயனாய்

## இல்லை

உன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில்
முகிழ்க்கிறது ப்ரபஞ்ச ரகசியம்
வைத்த கண்ணை எடுப்பதற்கில்லை
தெரிந்ததை சொல்வதற்கில்லை

## ஆனந்த அவஸ்தை

அம்மாவும் அப்பாவும் பூங்காவின் பெஞ்சில்
அடுக்கடுக்காய்ப் பிரச்னைகளை
அடுக்கிக்கொண்டிருக்க
வண்ணத்துப்பூச்சிகளை விடாது விரட்டுகிறது
குழந்தை… அமர்ந்தும் எழுந்தும் பிடிபடாது
விலகி விலகிப் பறக்கும் விந்தை வண்ணங்கள்
துரத்துகிற குழந்தையின் பிஞ்சுக்கரத்தில்
தற்செயலாய்ச் சிக்குகிறது வண்ணமே வடிவான
ஜீவன், குழந்தையின் முகத்தில் குதூகலத்தின் ஒளி
மாட்டிக்கொண்டதின் கண்களில் மரணத்தின் கிலி

## ஒன்றுமில்லை

எதிர்பாராமல் நாம் சந்தித்தபோது
மௌனமாக நீ
மௌனமாக நான்
சத்தமாக மௌனம்

## நடந்ததும் கடந்ததும்

வெகுதூரப் பயணத்தினூடே
திரும்பிப் பார்த்தபோது, அவளில்லை
பராக்குப் பார்த்துக்கொண்டே
வந்தவள் நின்றுவிட்டாள் போலும்
ஏதேனும் நடந்திருக்கும்
சுவாரஸ்யமாகத் தென்பட்டிருக்கும்
பார்த்ததும் கவரப்பட்டிருக்கலாம்
பாதை மாறியிருக்கலாம்
நின்றுவிட்ட அவளும், சென்றுவிட்ட நானும்
ஒருவேளை இனி சந்திக்காது போகலாம்
பயணத்தில் பாதை மாறியதோ
பாதை மாறிப் பயணித்ததோ
பெரிய விஷயமில்லை
என்றும் அது ஆகிவிடலாம்

## அவனும் ஒருவன்

அவனைப்போல் ஒருவன்
அதற்கு முன் இருந்ததில்லை என்கிறார்கள்
துறவி என்றும் இல்லவே இல்லையென்றும்
பரவிப் பெருகின அவனைப்பற்றிய கதைகள்
ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாய்
மரமொன்றின் கீழே அசையாது உலகை
மறந்தே உட்கார்ந்திருக்கிறான்
அன்ன ஆகாரம் அதிகமாய் உண்பதில்லை
அது சரி இது தப்பு என்றெல்லாம்
சொன்னதில்லை. அண்டப் பெருவெளியில்
அவனும் ஒரு துகளெனவே
அசையாது ஆடாது இருக்கிறான்
அவனைப்போல் ஒருவன்
அதற்கு முன் இருந்ததில்லை என்கிறார்கள்

# Wither Freedom, Wither Future, Wither Lokpal?!

**- Aparna Datar**

I along with a bunch of young mothers run a small community program in Tokyo's Edogawa-ku where we support an AIDS orphanage for impoverished and abandoned children with AIDS, the only one in the entire state of Maharashtra. The state accounts for almost 25 percent of our National Income and a fourth of our industrial output is India's richest State. But, there are no State run AIDS orphanages in Maharashtra. A rough guesstimate: every sixth rural poor family in Maharashtra has an AIDS patient within it. The orphanage itself is located in the city of Pune, a 45 minute drive from Hinjawadi, one of India's most celebrated IT parks. what does Lokpal means to them and their Future and will the promised growth trickle down as impossibly as it promises.



Pune is a two hour drive from Mumbai, home to Dharavi, the gargantuan mother of all slums, India's migrant magnet. Let me take you to Laxmi Nagar, a far smaller slum in Pune, not even a fraction of Dharavi's size but representative of Dharavi on the standard of living yard stick. Home to over 5000 laborers over, this massive labyrinth of tin shanties at the bottom of a hill has been waiting: for clean air, clean drinking water, sanitation, and electricity forever. No ones even sure when it came up, it's been there from that far back. The all-pervading smell is that of sewage, and garbage, that runs thru open drains in a green slime of a network. In absence of a open drain the sludge just trickles all over the neighborhood in dark little rivulets. Diarrhea ,TB and Malaria prey upon sleeping babies perched upon with flies. Hygiene of course is non-existent. Traffic blares 24/7.A handful of stand posts server the over 700fami.ies who live here. Waters sporadic except for a couple hours a day and people come to blows over water. Women have to walk over 49min distance to get water cutting into precious time at work and wages. Water costs over twelve rupees a liter strictly for the poor in this water abundant city .I spent 26 years there and do not recall paying that sum for water. So some keep collecting water that percolated in ditches at the side of the roads...which of course cannot be used for drinking. Communal anger feeding into people's frustration however freezes at one point: an English and Math Class run thru some community program or the other. Education is the hope of Laxmi nagar with a kid doing better at school an envy as well as pride of the neighbors. They labor as one people until....one of them gets attacked by AIDS.

Many of the kids who live at Manavya the orphanage we work with often come from backgrounds like these as well as the rural Pune. The child hits the road after the mother goes away. Often the mothers are driven away and her assets such as a shanty, a vehicle etc. forcibly grabbed. The disease is used by people around her to grab any schooling, treatment, and, any semblance of social security that may exist, all paid for by us the tax payers, but that the child may be entitled to. Police, local goons from political gangs collude to prey upon such a family especially if there's assets involved.

And this is not particular to this slum alone, it's everywhere, extending deep into rural Pune.

Sangli district of Maharashtra, a prosperous industrial hub is home to Maharashtra’s largest AIDS afflicted population. As the states income grew there was a drop in the states secondary school enrollment and many connect the dots to blame AIDS. Once the parents go the child's forced to hit the street and drop out of school. This happens across income groups, except of course the really well off. The obvious reason is governance. Police won't stop the family from Being tossed out of his home, state won't fight to protect the child's property rights, police won't stop the school from throwing the child out of school, health officials actively abetting discrimination won't be taken to task by the police. There will be too few social workers attending to far larger number of children.

For the sick child Lokpal means police, health and education bureaucracy will no longer be able to steal his future, giving him as much a shot at life as Manavya would. There are three hundred thousand children working as sexual slaves in India. No need to argue over number sources...just Google any of the govt. or UN websites for it. Many of them must have come from a place like Laxminagar. TB is the first symptom of AIDS. Walk down to Pune Railway station where a number of children work ,at Railways Parcel offices, at the tea stalls , restaurants, at small blacksmiths, tanneries , and other hard manual labor requiring units that line Pune Station. Or who just beg...all over the city, clear imports from the umpteen languages they speak. TB exists in almost all of them almost as do other diseases. An excellent public hospital is highly accessible, only to those fortunate enough to come across a social worker.

Going back if the child's parents had access to a social security and a health care system that worked for them or a compulsory primary education that meant a quality compulsory one, this kid would not have had AIDS or ended up as a street urchin. And people responsible are not just Sonia Gandhi’s of the country, it's the school teacher who declares so and so has such and such disease, the principal of a govt funded public school that blames "other uneducated "parents under whose pressure he was forced to toss out the kid, the nursing staff that won't dress his wounds despite being paid for us, the health care staff that will create an environment fostering discrimination and of course the police whose in cahoots with everyone from the pimp to the local goon to the politician trying to steal what the Constitution says belongs to the child. And all of them can and will go to Jail for stealing a Childs future ...the Lokpal will come .There's no stopping this now. The sluggish self-centered Indian middle class now wants this for the kid whose waited for too long.

In early eighties Rajiv Gandhi made a 100 crore grant for Dharavis Redevelopment. Almost all was lopped off by officials and Congress Politicians. A decade later Dharavi, notwithstanding its share stolen away, Dharavi has worked itself out of dire poverty and misery into a thriving prosperous manufacturing urban hub, that's engaged in almost everything. Looked upon by the hordes of poor who flock it as a vocational training destination, it has given birth to business worth millions and millions of dollars under the impetus provided to a large extent by globalization. But it still has open gutters, it still has AIDS, it's still has severe lack of sanitation....but the Crime rate has come down dramatically and locals say a woman is safer in Dharavi than elsewhere in Mumbai. Could be an exaggeration, but what that means is that kids won't be recruited any more by drug lords and other gangs. This is such a big development from a child’s point of view. He has safer and better things to do here. This is the kind of trickle down that we expect Lokpal to deliver. And if we could not reach Azad Maidan, we can easily twitter with a vengeance.

# Breath through to Everest!

**Think Big. Our service should be focused on building a better world and a better society. In personal life, have a strong conviction and faith that all is well and good is going to happen. The Divine will take care of everything**

**– His Holiness Sri Sri Ravi Shankar, 31st December 2011!!**

This is the story of a young lady from north-eastern India. Her name is Tine Mina and she is from a village in Arunachal Pradesh which along with the other states in the north-east, is amongst some of the most beautiful places in India with lovely people known for their culture, innocence and simplicity.

Tine was born in September 1987 into a poor family of farmers in Etali Village in the Dibang Valley district of Arunachal Pradesh. As a child, she loved the awesome mountain scenery and pure fresh air. It was in scaling heights, that she found peace. On 9th May 2011, at the age of 25, Tine reached Mount Everest.

Climbing Mt. Everest was, of course, not easy. Everything, except her grit, was going against her. The raging wind had knocked off her tent when she reached 7200m, forcing her to take shelter in the tent of another expedition. She was fatigued. On the eve of the D-day, she had to survive on a half-packet of instant Maggi noodles. Her wireless phone was already powerless.

Yet nothing mattered to her. She lived, slept and dreamt of the mountain of her love. Her courage bore fruit at 11am on a memorable Monday. While she had been endowed with physical stamina as a result of the hard life of the outdoors from her childhood, mental stamina, the ability to take matters in their stride and stay relaxed under trying circumstances, was Tine's most vital weapon

Tine stated in an interview that an Art of Living workshop that she had attended had provided this vital weapon. The breathing techniques, the Sudarshan Kriya, in particular, had really helped her when she was gasping for breath. Meditation kept her both relaxed and energized.

Tine credits her success to the clarity of mind that results from a meditative state. There was a critical point when she had to take the tough decision of going onwards thereby risking not only her life but that of her Sherpa's, or retreating. Tine was caught between the proverbial devil and the deep sea. She says, "I meditated for a while and got the clarity to decide to move on".

Today, Tine has big plans for youth. She wants to popularize mountaineering and adventure sports in the naturally endowed environs of her lovely state.

**Mohanagopal**

**References**


1. http://www.artofliving.org/
2. http://www.arunachaltourism.com/
3. http://easternpanorama.in/index.php?option=com_content&view=article&id=1542:the-girl-who-dared-to-dream-big&catid=45:web-special&Itemid=24

# ஐஸ்கார் வீரமணி

- இரா.செந்தில்குமார்

எனக்கு எப்போது ரஜினி பித்து பிடித்தது என்று சரியாக நினைவில்லை. எனக்கு ஒரு ஏழு வயது இருக்கும்போது பிடித்திருக்கலாம், என்று நினைக்கிறேன். எதை செய்தாலும், அதில் அதீதமாய் போவது என்ற என்னுடைய இயல்புப்படி, ரஜினி விஷயத்திலும் நான் மிகத்தீவிரமாக இருந்தேன். சொல்லப்போனால், என்னுடைய வயது ஒத்த பெரும்பாலானவருக்கு சிறு வயதில் ரஜினி தான் ஆதர்சமாய் இருந்து இருக்க முடியும் என்று தோன்றுகிறது.ரஜினி பிடிக்கும் என்றால், கட்டாயமாய் கமலஹாசனை பிடித்திருக்க கூடாது என்பதுஅன்றைய முதல் விதி. எனக்கோ கமல் டான்ஸ் மிகவும் பிடிக்கும். இதை வெளியே சொன்னால், ரஜினி ரசிகனாய் இருப்பதற்க்கான தகுதியை இழக்க நேரிடும் என்று,வெளியே மிகத்தீவிரமாய் கமலை பழிப்பேன். எங்களை பொறுத்தவரை, கமல் படத்திலேயே "கெட்டப்பழக்கம்" எல்லாம் செய்கிறார் என்றால், நிஜத்திலும் கெட்டவர் தான் என்பது ஒரு முன் முடிவு.

இந்த ரஜினி காதல் என்பது பொங்கல் நாட்களில், வெகு தீவிரமாகி விடும் . எங்களுடைய பள்ளி நாட்களில் , நண்பர்களுக்குள் பொங்கல் வாழ்த்து அனுப்புவது என்பது ஒரு மிகப்பெரிய கேளிக்கை. இதற்கு நண்பர்களுக்கு பிடித்த மாதிரி பொங்கல் வாழ்த்து அட்டை சேகரிப்பது கிட்டத்தட்ட டிசம்பர் வாக்கிலேயே ஆரம்பித்து விடும். ஆண்கள் என்றால் ரஜினி,கமல். பெண்கள் என்றால் ஸ்ரீதேவி, சற்று வயதானவர்கள் என்றால் ஏர் உழவன் அல்லது சூர்யோதயம் இவைதான் அப்போது சக்கை போடு போட்ட வாழ்த்து அட்டைகள். இதில் போட்டி என்னவென்றால், யாருக்கு அதிகமாக வாழ்த்து அட்டை வருகிறது என்பதில் தான். நான் தெரிந்தவர்,தெரியாதவர் அனைவருக்கும் அனுப்பி வைப்பேன். அப்போது தானே , அவர்களும் நமக்கு அனுப்புவார்கள் ? எல்லாம் இப்போது நாம் FB லே தாறுமாறா like போடுவது மாதிரித்தான். நிறைய லைக் வேண்டும் என்றால், நிறைய லைக் போட வேண்டும். இந்த கலை வெறி எல்லாம் வெளியேதான். வீட்டுக்குள்ளே பப்பு வேகாது .

சினிமா நடிகன் என்றாலே, எங்க அப்பாவிற்கு ஜென்ம விரோதி என்று அர்த்தம். சினிமா பத்தி பேச்சு எல்லாம் நினைத்து கூட பார்க்க முடியாது

ஒருமுறை, "ரஜினி ரசிகன்" என்ற புத்தகம் வாங்கினேன் என்று துரத்தி துரத்தி அடித்தது இன்றும் நினைவில் இருக்கிறது.

நான் படித்த காண்வென்டின் எதிரில் ஐஸ் விற்ற வீரமணிதான், எனக்கு ரஜினி பற்றிப்பேச கிடைத்த சக நண்பர். மதியம் மூன்று முப்பதுக்கே எனக்கு பள்ளி முடிந்துவிடும் என்றாலும், ரிக்ஷாக்காரர் என்னவோ நான்கு மணி வாக்கில் தான் வருவார். இடைப்பட்ட முப்பது நிமிடம், எனக்கு ரஜினியின் புதுப்பட கதைகளை சொல்வது ஐஸ்காரர் வீரமணி தான்.

எப்படி இவருக்கு மட்டும் யாருக்குமே தெரிந்திராத ரஜினியை பற்றிய புது புது செய்திகள் தெரிந்து இருந்தது என்பது இன்று வரை எனக்கு ஆச்சர்யமே. வீரமணி அவருடைய ஐஸ்பெட்டியில் இருந்து ஐஸ் எடுத்து கொடுக்கும் லாவகத்தை பார்த்த முதல் நாளே , நான் கண்டு பிடித்து விட்டேன், அவர் ஒரு ரஜினி ரசிகர் ஆகத்தான் இருக்க முடியும் என்று. நீங்கள் கூர்ந்து கவனித்தால், ஒன்று புரியும். எல்லா ரஜினி ரசிகர்களிடமும் , கொஞ்சம் ரஜினி ஒட்டி கொண்டு இருப்பார். வீரமணியிடம் அது கொஞ்சம் அதிகம். அதே போல், ரஜினி படக்கதையை சுவாரஸ்யமாக சொல்ல அவரை போல் யாராலும் முடியாது. அவர் "தம்பிக்கு எந்த ஊர்" படத்தின் கதையை சொன்ன விதம் இன்றும் என் நெஞ்சில் இருக்கிறது. வீரமணியை பார்த்தால், அவர் பிழைப்புக்காக ஐஸ் விற்க வந்தவர் போலவே நினைக்க தோன்றாது . எளிமையான ஆடைகள் என்றாலும் அதில் ஒரு ஸ்டைல் ஒட்டி; இருக்கும் . எதை கையாள்வதிலும் ஒரு நளினம். எதோ பொழுதுப்போக்கிற்காக ஐஸ்

விற்கிறார் என்றும், ஐஸ் விற்று முடித்தவுடன், தனது காரில் ஏறி போய்விடக்கூடும் , என்றே எண்ண தோன்றும்.

நான் அக்கௌன்ட் வைத்த முதல் பேங்க் வீரமணி தான். MIZUHO பேங்க் அக்கௌன்ட் எல்லாம் பிற்பாடு தான். எனக்கு அப்படி, ஒரு சலுகை அவர் கொடுத்ததற்கு காரணம், நானும் ரஜினி ரசிகன் என்பதாலேயே,என்று நான் உறுதியாக நம்பினேன். ; ரஜினியின் புதுப்படம் வரப்போகிறது என்றால், அந்த ஒரு மாதகாலமும் அவரது உடல் மொழியில் ஒரு தீவிரம் கூடி விடும் . எந்த நேரமும், அந்த படத்தை பற்றி மட்டுமே பேச்சு, நினைவு . நாட்கள் நெருங்க நெருங்க ரஜினியே அவருள் இறங்கி விட்டதாகவே நான் உணர்வேன். படிக்காதவன் ரிலீஸ் என்று நினைக்கிறேன் . தஞ்சை ஜூபிட்டர் திரைஅரங்கில், படம் பார்த்த அடுத்த நாளே காக்கி சட்டையும், பேண்டும் தைத்து போட்டு கொண்டு வந்தார். என்னுடைய டான்ஸ்க்கு மிக பெரிய ரசிகரும் வீரமணி தான். அப்போது எல்லாம் பள்ளியில் எந்த விழா என்றாலும், நிச்சயம் என்னுடைய டான்ஸ் ஒன்று இருக்கும். இதை முன்கூட்டியே வீரமணிக்கு நான் தெரிவித்துவிடுவேன். நிகழ்ச்சி அன்று, எப்படியாவது வாட்ச்மேனின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு ,பள்ளிக்குள் நுழைந்து விடுவார்.

ஒரு முறை, அவர்க்கும், அவரது போட்டியாளர் இக்பால்க்கும் ஐஸ் விற்பதில் சண்டை வந்து விட்டது . இக்பால் மிகவும் கனத்த சரீரம். சண்டை வந்த நொடியில், அருகில் இருந்த எனக்கு, இந்த சண்டையை வீரமணி தவிர்த்து விட வேண்டும் என்றே தோன்றியது. வீரமணி எங்களை ஒதுங்க சொல்லிவிட்டு , இக்பாலை அடித்த விதம் , எந்த ரஜினி படத்திற்கும் நிகரானது. பெருத்த உருவமான இக்பால் அடி தாங்க முடியமால் ஓட, ஒரு கையால், தலையை கோதி விட்டு கொண்டு, மற்றொரு கையால் தாவி பிடித்து உதைத்த உதையில் இக்பால், அதற்கு பிறகு, அங்கு வராமலே போனார்.

காலப்போக்கில் நான் ஆறாம் வகுப்பிற்காக வேறுஉயர்நிலைப்பள்ளி சென்ற உடன், வீரமணியை பார்க்க முடியாமலே போனது.காலமும் உருண்டோடியது . நான் என்னுடைய பழைய பள்ளியை, கடக்கும் போது எல்லாம், வீரமணியை தேடினேன். ஆனால் அதற்கு பிறகு அவரை காணவே இல்லை. ஏறக்குறைய இருபது ஆண்டுகள் கடந்து விட்டது.நான் என்னுடைய பள்ளிப்படிப்பை முடித்து பின்பு கல்லூரியும் முடிந்து சென்னையில் வேலையில் அமர்ந்தேன்.ஒரு முறை, சென்னையில் இருந்து மன்னை செல்லும் இரவு பேருந்தில், பயணித்து கொண்டிருந்தேன் . நன்கு தூங்கி விட்ட நிலையில் ஒரு இடத்தில உணவு அருந்துவதற்காக பேருந்து நிறுத்தப்பட்டு, அங்கு எழும்பிய கானா பாடலில் கண் விழித்து கொண்டேன். தூக்கம் போனதால், இறங்கி தேனீர் அருந்திவிட்டு, காசு கொடுக்க கை நீட்டியபோது, கல்லா பெட்டியில் இருந்த முகம் பழகிய முகமாய் தெரிய சட்டென்று பொறி தட்டியது. அது வீரமணியே தான். கூட்டம் அதிகம் என்பதால், படு வேகமாக காசை வாங்கி கல்லா பெட்டியில் எறிந்து கொண்டு இருந்தார். அதே லாவகம். நான் சற்று தாமதித்து, நீங்கள் ஐஸ்கார் வீரமணிதானே என்று கேட்ட உடன் சட்டென்று நிமிர்ந்து என்னை பார்த்தார். வீரமணியை காலம் சிதைத்து இருந்தது. தலை முழுக்க நரைத்து , முகம் வதங்கி, மிகவும் மெலிந்து காணப்பட்டார். மிகவும் உருமாறியிருந்த, அவரை எப்படி நான் அடையாளம் கண்டுக்கொண்டேன் என்பதெல்லாம், வாழ்க்கையின் விசித்திரங்களில் ஒன்று.

என்னை அடையாளபடுத்தி கொண்டதும், எழுந்து வந்து என்னை தழுவி கொண்டார். என் வேலை , குடும்பம் குறித்து எல்லாம் மிகுந்த அன்புடன் கேட்டுக்கொண்டார்.அந்த கடை, தனது தங்கையின் கணவரது என்றும், தான் அதில் வேலை பார்ப்பதாகவும் சொன்னார். குடும்ப வறுமை காரணமாக , வெகு நாட்களுக்கு, முன்பே இந்த ஊருக்கு குடிபெயர்ந்து விட்டதாகவும் தெரிவித்தார். சட்டேன்று, நினைவுக்கு வந்தவராய், “தெரியும்இல்லே, பாபா படத்துக்காக ஒரு பெரிய ஆலமரத்தையே, ஏரோப்லேய்ன்லே இமய மலைக்கு கொண்டு போறாங்க. தலைவர் பாபாவில் கலக்குவார் பாரு” என்றார் . இதை சொன்ன நொடியில் , என் கண்ணெதிரே பழைய ஐஸ்காரர் வீரமணி தோன்றி மறைந்தார்.

Where Purity is Power

ISKCON

# Govinda's

Pure Vegetarian Restaurant



May this festival bring Good Luck, Prosperity, Joy and fill everyone's year ahead with lots of Happiness !!

Wish you all a very Happy Pongal !!

**Govinda's**

2-23-4 Funabori, Edogawa-ku, Tokyo 134-0091
TEL(FAX) 03-6808-2157 , Mapcode : 658 596 * 02
Visit us @ ***http://www.govindas-tokyo.com***

Govinda's is operated by

**MSG Japan**
**Corporation**

# Mission Suryodaya

- Dr. T Jeevanandam


**If we preserve nature, nature will preserve us.**

**SURYODAYA** is by the people for the people (to the people) of India.

Cultures throughout the world honor the Sun for it gives us life, light and energy. Such forms of nature worship are not primitive, but scientific. They generate feelings of gratitude, respect and adoration for air, water, plants - the whole environment we live in, and teach us the eternal lesson.

In launching India's National Action Plan on Climate Change on June 30, 2008, the Prime Minister of India, Dr. Manmohan Singh stated:

"*Our vision is to make India's economic development energy-efficient. Over a period of time, we must pioneer a graduated shift from economic activity based on fossil fuels to one based on non-fossil fuels and from reliance on non- renewable and depleting sources of energy to renewable sources of energy. In this strategy, the sun occupies center-stage, as it should, being literally the regional source of all energy. We will pool our scientific, technical and managerial talents, with sufficient financial resources, to develop solar energy as a source of abundant energy to power our economy and to transform the lives of our people. Our success in this endeavor will change the face of India. It would also enable India to help change the destinies of people around the world*".




India is endowed with vast solar energy potential. About 5,000 trillion kWh energy per year is available over India's land area with most parts receiving 4-7 kWh per sq. m per day. Hence both technology routes for conversion of solar radiation into heat and electricity, namely, solar thermal and solar photo-voltaic, can effectively be harnessed providing huge scalability for Solar-India. Solar energy also provides the ability to generate power on a distributed basis and enables rapid capacity addition with short lead times. Off-grid decentralized and low-temperature applications will be advantageous from a rural electrification perspective and meeting other energy needs for power, and heating and cooling in both rural and urban areas. The constraint on scalability will be the availability of space, since in all current applications, solar power is space intensive. In addition, without effective storage, solar power is characterized by a high degree of variability. In India, this would be particularly true in the monsoon season. From an energy security perspective, solar energy is the most secure of all sources, since it is abundantly available.

Theoretically, a small fraction of the total available solar energy (if captured effectively) can meet the entire country's power requirements. It is also clear that given the large proportion of poor and energy deprived population in the country, every effort needs to be made to exploit the relatively abundant sources of energy available in the country. While today, domestic coal based power generation is the cheapest electricity source, future scenarios suggest that this will change. Already faced with crippling electricity shortages, price of electricity traded internally, touched Rs 7 per unit for base loads and around Rs 8.5 per unit during peak periods. The situation will also change, as the country moves towards imported coal to meet its energy demand. The price of power will have to factor in the availability of coal in international markets and the cost of developing import infrastructure. It is also evident that as the cost of environmental degradation is factored into the mining of coal, as it must, the price of this raw material will increase.

In the situation of energy shortages, the country is increasing the use of diesel-based electricity, which is both expensive – costs as high as Rs 15 per unit - and also polluting the environment. It is in this situation that the solar energy is both urgent and feasible to enable the country to meet long-term energy needs.

It is Suryodaya's endeavor to spread the message to our people in various levels by way of organizing workshops / seminars / exhibitions / road shows to reach out the urban /rural / semi urban areas. They also would like to associate with manufacturers of solar energy products to come forward in participating in such shows as they could provide services to the people who are willing to contribute towards establishing solar energy generation in their homes and offices. SURYODAYA's mission is to create awareness on SOLAR ENERGY and to create a base for propagation of this awareness by way of strategic partnerships with schools and colleges, non-governmental organizations, community. If you would like to participate and contribute to this mission, send a mail to the following address as a group of people in Chennai area are contemplating to organize the above said workshops/seminars etc. in rural areas and remote areas. Interestingly, one of the members of this mission has been manufacturing solar panels since 2005. Hence, practical implementation is imminently possible in a short span of time. SOLAR-ED@googlegroups.com

**New technology to make solar panels**

A novel way to make thin, uniform coatings developed at Rice University, USA could reduce the cost of making conventional silicon solar cells, and could open the door for new kinds of solar cells that are far more efficient or cheaper than conventional ones. The technology, which deposits coatings in a low-temperature, liquid-based process rather than the high-temperature gas-based process used now, is getting popular. It is possible to use the technology to replace a standard step in conventional solar cell manufacturing—adding an anti-reflective coating to silicon wafers to help them to absorb more light. It will also offer a more advanced anti-reflection technology, called black silicon.

At the same time, developments are underway using advanced applications of the process, including fabricating solar cells made of carbon nanotubes or Nano scale crystals called quantum dots. Such solar cells will probably take years to commercialize, but could far out-perform conventional solar cells. Nano solar cells have been attempted before, but the developers think its new manufacturing technology could make them affordable. As a replacement for high-temperature processes on a conventional manufacturing line, the liquid-based process can lower manufacturing costs. It is estimated that replacing a conventional coating machine with the new technology based machine, could save a solar panel manufacturer about $1 million in electricity costs per year.

This brand new development in solar panel making process will change the perspective in cost of production and usage!! Commercialization of this technology is yet to come but let's hope we will contribute to help our electricity-hungry nation.

# CARROM

## ANJANA GOVINDARAJAN



Carrom is a game I always play when I go to India every summer. I wondered why Carrom is not a game played worldwide, but I soon found out that the game is becoming very popular.

Unfortunately, the true origins of Carrom are unknown. However, some people say that it started in India, Bangladesh, Pakistan, Burma, Ethiopia, and some even say it started in Britain. Today, Carrom is played in a lot of countries especially in central and South-East Asia such as India, Bangladesh, Sri Lanka, Malaysia, and Pakistan. In the 1970s, Carrom gradually spread in Europe so now it is also played in Switzerland, Germany, Holland and Italy. Also, they play Carrom in China, Japan and Australia.

Japanese call Carrom Tokyuban (投球盤) and it was brought to Japan during the Meiji and Taisho periods. During these two eras, it was a very popular game but then gradually lost popularity. Now it is still played in Hikone, Shiga prefecture (滋賀県彦根市).

Initially, carom was played as a game, for fun, but carom tournaments first started in 1935. In 1958, India and Sri Lanka officially found the Carom federation. The competitions are now held in Pakistan, Afghanistan, Malaysia and the Maldives.
The rules of Carrom officially called the 'Laws of Carrom', were modified in 1988. In October of the same year, the International Carrom federation was formed. India, Sri Lanka, Maldives, Malaysia, Germany and Switzerland met in Chennai, a coastal city in Southeast India for the first Carrom congress.

There are a lot of Carrom champions, but there isn't one official champion. The Carrom champion of India is a 54year old man called Anthony Maria Irudayam, from Chennai, India. During his school days, he loved to play both Carrom and Soccer.

Although he competed a lot in Soccer as well, he enjoyed playing Carrom and participated in various competitions. Gradually, he improved and became the Carrom champion of India. There are a lot of Carrom championships, and they happen very frequently. The next Carrom world cup will be held on September 2012 in Sri Lanka. I hope that in 2012, Carrom becomes a worldwide sport. It is a very fun game, so I suggest you go play in the near future.

## விடுகதை விடைகள்

### RAMANATHAN

1. கண்ணிமைகள்
2. நெருப்பு
3. குருவி கூடு
4. முத்து
5. தீக்குச்சி

# தண்ணீர் தண்ணீர்

Chandhan Rangarajan

**"Water, water, everywhere, nor any drop to drink."(Simon Coleridge)**

Water is, the elixir of life, Water has medicinal value,

Water is the primary necessity of the human body.

**"APSVANTARMRITMAPSU BHESHAJAM" (Atharvana Veda)**

Water is the best of all things.

**PINDAR (C. 522-C. 438 B.C.), Olympian Odes**

When the well is dry, we know the worth of water.

**BENJAMIN FRANKLIN, Poor Richard's Almanac, 1746**

All the water that will ever be is, right now.

**National Geographic, October 1993**

If there is magic on this planet, it is contained in water.

**LORAN EISELY, The Immense Journey, 1957**

Water has become a highly precious resource.

There are some places where a barrel of water costs more than a barrel of oil.

**Lloyd Axworthy, Foreign Minister of Canada (1999 - News Conference)**

Why this Kolaveri Kolaveri Kolaveri di

Freshu wateru very preciousu

Dontu wastu freshu wateru

Freshu Wateru dwindlingu soonu

Do you gettu the pointu

Why this Kolaveri Kolaveri Kolaveri di

**Chandhan Rangarajan, Tokyo Pongal 2012!!! ☺**

Pongal is our harvest festival and water is an essential resource for a bounty harvest. The below observation by Mikhail Gorbachev (former leader of the Soviet Union) pretty much summarizes the significance of water for the survival of mankind.

"Water, not unlike religion and ideology, has the power to move millions of people. Since the very birth of human civilization, people have moved to settle close to water. People move when there is too little of it; people move when there is too much of it. People move on it. People write and sing and dance and dream about it. People fight over it. And everybody, everywhere and every day, needs it. We need water for drinking, for cooking, for washing, for food, for industry, for energy, for transport, for rituals, for fun, for life. And it is not only we humans who need it; all life is dependent upon water for its very survival."

We, in Japan will appreciate this observation even more after the Fukushima nuclear crisis when there was a fear driven rush for uncontaminated bottled water for domestic consumption.

With this prelude, let's wet ourselves in some "WATER" facts.

## Facts/Figures

Here are some exhibits to illustrate why the world and especially India will be under severe water stress in the coming years.

### Exhibit I

Though fresh water is available in abundance in Asia, the per capita availability of water is very critical due to a combination of burgeoning population growth and water mismanagement.





FIGURE 2.3 Continental Average Water Availability

The long-term average annual availability of fresh water by continent in cubic kilometers per year. Note the substantial total volume of water available in Asia, North America, and South America. *Source:* Shiklomanov 1998.







FIGURE 2.4 Continental Per Capita Water Availability

The long-term average annual per-capita availability of fresh water by continent in thousand cubic meters per person per year. Comparing this figure with the previous shows the importance of population in determining overall water availability. While Asia has the largest total water availability, it has the lowest per-capita availability because of its large population. Data on population are for 1995. *Source:* Shiklomanov 1998.

### Exhibit II

Indian river basins are the most heavily irrigated and also are flash points for interstate & international water disputes.




### Exhibit III

Domestic water disputes arise among south indian states where the per-capita water availability is in the critical red zone and could potentially lead to widespread conflicts.




From the preceding exhibits, it's very clear that fresh water resources are scarce and could be potential source of major conflicts between nation states. Now, just like me some of you might be wondering that water disputes are too trivial to balloon into full scale wars, right? For the record, so far there have been 200+ disputes or wars fought for controlling water resources, between 3000 BC to 2010.

Check out http://www.worldwater.org/conflict/list/ for a snapshot. You could add the recent Mullaiperiyar dam dispute between two traditionally friendly states - Tamilnadu and Kerala, to this long list of water conflicts.

## So, what can the common man do?

As long as we are AWARE of the importance of WATER; there is always HOPE. While we hope and pray that interstate and international water disputes are resolved amicably and fairly by The respective authorities, we could start with simple water conservation practices at home. You can find tons of tips on the internet. Here are some,

1. Only run full loads in the washing machine
2. Don't let the water run while you're washing dishes or brushing your teeth.
3. Use water-saving showerheads and take shorter showers and fix leakages
4. Only run full loads in the dishwasher

**L**et's collectively aspire for a world with equitable and sustained access to water and a clean environment. Now, next time you see water, value it more than GOLD!! Will you? I am sure you WILL ☺

Before I draw the curtain, let's lighten up with some cartoons that take a dig at water related issues.













Enjoy some online "Water" gaming ☺.

- http://www.watergamesonline.com/
- http://www.freeonlinegames.com/tag/water_games
- http://www.freeaddictinggames.com/tag/water/




## MORE FUN WITH "WATER"

Check your IQ with "Water" quizzing ☺

http://planetgreen.discovery.com/games-quizzes/water-iq-quiz/

http://earthguide.ucsd.edu/earthguide/diagrams/watercycle/watercycleq.html

http://kids.nationalgeographic.com/kids/games/puzzlesquizzes/quizyournoodle-water/

http://news.bbc.co.uk/2/hi/uk_news/magazine/7883768.stm

Chandhan Rangarajan

# சின்னஞ்சிறு ஆன்மாவிற்கு சமர்பணம்

முல்லைப் பெரியாறு அணை. நீரை மட்டும் தேக்கி வைக்கும் அணையல்ல. விவரம் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்ற பாகுபாடில்லாமல் எல்லோரையும் உசுப்பேத்தி குரோதங்களை தேக்கிவைக்கும் அணையாக மாறிப்போய் ரொம்ப காலமாச்சு. நமக்கு கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் ஒரு பக்கம். அடுத்தவனுக்கு கிடைக்கக்கூடாது என்ற எண்ணம் மறுபக்கம். சிறப்பான நிர்வாகத்தை மனத்தில் கொண்டு பிரிக்கப்பட்டவை மாநிலங்கள். ஆனால், இன்று நாட்டையே பிரித்துப்பார்க்கும் குரோத எண்ணத்தை வளர்த்திருக்கிறது. கவலை தரக்கூடிய விஷயம். முல்லைபெரியார் அணையை கட்டியவர் ஜான் பென்னி குவிக். இங்கிலாந்துக்காரர். அவர் சந்தித்த பிரச்சனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அணையை கட்ட நினைத்த காலத்தில் தொடங்கிய பிரச்னை, இன்றுவரை நம்மையும் அதன் ஓட்டத்தில் இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது.

பெரியாறுக்கு அணை கட்டும் முதல் முயற்சி 1850ல் தொடங்கப்பட்டது. ஆனால் தொழிலாளர்களின் ஊதிய பிரச்னையினாலும், சுகாதாரமற்ற சூழலாலும் மிகக்குறுகிய காலத்திலேயே கைவிடப்பட்டது. அதன்பின், 1862ல் பலமுறை கட்டுமான அனுமதி பெறும் முயற்சி நடந்தது. உபயோகமில்லை. பின் கைவிடபட்டது. 1867ல் கேப்டன் J.G. Ryves அறுபத்தி இரண்டு அடி உயர அணைக்கு முயற்சிகளை தொடங்கினார். ஆனால் அதுவும் அன்றைய மெட்ராஸ் அரசால் தாமதப்பட்டதுதான் மிச்சம். கடைசியாக 1882ல் வந்தார் அணையின் ஹீரோ ஜான் பென்னிகுவிக். கட்டுமானத்துக்காக ஆகும் செலவுகளை கணக்கிட்டு மேலதிகாரியின் ஒப்புதலுக்கு அனுப்பினார். ஒரு வழியாக 1884ல் ஒப்புதலைப் பெற்றார். அணை கட்ட நிலத்தை கையகப்படுத்தவேண்டுமே? அதற்காக அணை அமைந்த பகுதியான 8 ஆயிரம் ஏக்கர் நிலத்தை பயன்படுத்த 999 ஆண்டுகளுக்கு திருவாங்கூர் சமஸ்தானத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். உண்மையில் இந்த பகுதி கோவையை ஆண்ட தம்புரான் மன்னருக்குச் சொந்தமானது. அதாவது இன்றைய தமிழகத்துக்குச் சொந்தமானது.

**நன்றி: Rediff**



கட்டுமானப் பணிகள் மே மாதம் 1887ல் தொடங்கப்பட்டது. சுண்ணாம்பு சுர்க்கி கலவையால் கருங்கல்லில் கட்டப்பட்டது. சுண்ணாம்பு, செங்கல் பொடி, சர்க்கரை, கால்சியம் ஆக்ஸைடு போன்றவற்றை பயன்படுத்தி செய்யப்படும் கலவை அது. பத்தொன்பதாம் நூற்றாண்டு தொழில் நுட்பம். பகீரதப் பிரயத்தனம் என்பார்களே அது இதுதான். 1895ல் கட்டி முடிக்கப்பட்டது. பதினெட்டு வருட உழைப்பு. உயரம் 176 அடி. நீளம் 1200 அடி. அடிமட்ட அகலம் 144.6 அடி. அன்றைய மதிப்பில் 104 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

அணையின் மொத்த கொள்ளளவு 443,230,000 m3 . அதுமட்டுமல்லாமல், அணை புவிஈர்ப்பு விசையின் அடிப்படையில் கட்டப்பட்டது. அதனால் நீர் அழுத்தம், அலைகளால் ஏற்படும் அழுத்தம், நில அதிர்வுகளினால் ஏற்படும் விசை போன்றவற்றை தன்னுடைய எடையினால் தாங்கிக்கொள்ளும் உறுதித்தன்மை கொண்டது.




அணையின் கீழ்மட்ட பணிகளை செய்யும் போது, அடிக்கடி காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டு அணையை அழித்தது.

அதனால் நீரை தேக்குவதைவிட திருப்பிவிடுவதே சிறந்தது என்று முடிவு செய்தனர். இதற்காக பிரதான அணையிலிருந்து 250 மீட்டர் துரத்தில் பேபி அணை கட்டப்பட்டது.

ஒரு புறம் பேபி அணை வழியாக தண்ணீர் சென்று கொண்டிருந்த போது, இன்னொரு புறம் பெரியாறு அணையின் கட்டுமான பணிகள் பாதுகாப்பாக நடந்தது. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் சில காரணங்களுக்காக அணைக்கு செய்யும் நிதியுதவியை நிறுத்தியது. கட்டுமானப் பணியை தொடர முடியாத நிலை.

பணியை நிறுத்த பென்னிகுயிக் விரும்பவில்லை. தன் சொத்துக்களையும், மனைவியின் நகைகளை விற்று அந்த பணத்தைக் கொண்டு அணையைக் கட்டிமுடித்தார். எப்படிப்பட்ட மனிதர் அவர்! அதனால்தான் இன்றளவும் அவர் புகழ் நிலைத்திருக்கிறது. அவரிடம் காணப்பட்டது ஓனர்ஷிப். அதாவது அணை நம்முடையாது என்ற எண்ணம். இந்த எண்ணம் எல்லோரிடமும் இருந்தால், நாடு எப்போதே முன்னேறியிருக்கும்.

அவருடைய திருவுருவச் சிலை மதுரை பொதுப்பணித்துறை (PWD) அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இன்றும் பென்னிகுயிக்கின் படம் பலரது வீட்டுச் சுவற்றை அலங்கரித்துக் கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. 2002ம் ஆண்டு அவருடைய பேரன் மதுரைக்கு வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்து பென்னிகுயிக் மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தினர். நினைக்கும் போதே மனத்தில் ஒரு அமைதியை ஏற்படுத்தும் இந்த சம்பவம் பென்னிகுயிக்கை யாருமே மறக்கவில்லை என்பதை நமக்குக் காட்டுகிறது.

சரி, முக்கிய பிரச்னைக்கு வருவோம். 1895ல் தொடங்கி அமைதியாக இயங்கிக்கொண்டிருந்த அணைக்கு ஆபத்து வந்த தினம் 16.10.1979. கேரள மக்களை பீதியில் தள்ளியது ஒரு பிரபல நாளிதழ். "இடுக்கி மாவட்டத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பெரியாறு அணை பலவீனம் அடைந்துவிட்டது. இதனால் கேரளாவின் நான்கு மாவட்டங்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படும். அதிக உயிர் சேதங்கள் ஏற்படும்" என்பதுதான் அந்த பீதிச் செய்தி. பிரச்னைக்கான பிள்ளையார் சுழி. ஆனால் இதற்கு முன்பாக 1976லேயே இது போன்ற ஒரு பீதியை கேரள அரசு கிளப்ப முயன்று, பின் அமைதியானது.

கேரள அரசு தன்னுடைய மின்சார தேவைக்காக இடுக்கிப் பகுதியில் 70 டிஎம்சி கொள்ளளவு கொண்ட மிகப்பெரிய அணையை கட்டத் தொடங்கியது. பெரியாறு மற்றும் முல்லையாறு மூலம் கிடைக்கும் நீரை பயன்படுத்தி இடுக்கி அணையில் 760 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கம். 1975ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் தேதி இடுக்கி அணையில் மின் உற்பத்தி தொடங்கியது. இடுக்கி அணையை பொறுத்தவரை நாம் மனத்தில் கொள்ள வேண்டியது இரண்டு விஷயங்கள்.

- முல்லை பெரியாறு அணையிலிருந்து வெளியே வரும் உபரி மட்டுமே இடுக்கி அணைக்கு செல்கிறது. அதாவது நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் நீர் மட்டம் உயரும் போது வெளியேறும் நீர் இடுக்கி அணைக்கு செல்கிறது.
- இடுக்கி அணையில் மின் உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் நீர், கடலை சென்றடைகிறது. அதாவது அந்த நீர் விவசாயத்துக்குப் பயன்படுவதில்லை. மின் உற்பத்திக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

ஒரு அணை கட்டப்பட்டால், அது கட்டப்பட்ட நோக்கத்தை மூன்று ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டும். இது தணிக்கைத் துறையின் கண்டிப்பு. ஆனால் முல்லை பெரியாறு அணையில் இருந்து வெளியேறும் உபரி நீரைக் கொண்டு இடுக்கி அணையில் 200 மெகாவாட் மின்சாரம் கூட உற்பத்தி செய்யமுடியவில்லை. முல்லை பெரியார் அணையில் 17 டிஎம்சி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், முல்லைபெரியார் அணையை உடைத்தால், இடுக்கி அணைக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். இடுக்கி அணையின் கொள்ளளவான 70 டிஎம்சியை எட்டுவதில் சிரமம் இருக்காது. இந்த ஐடியாவை கொடுத்த புண்ணியவான் இடுக்கி அணையை கட்டுவதற்கு ஆலோசனை சொன்ன உயர்திரு பரமேஸ்வரன் நாயர். அவர் பற்ற வைத்த நெருப்பு இன்று வரை கொழுந்துவிட்டு எரிகிறது.

உண்மையிலேயே பெரியார் அணை பலவீனமானதா? இல்லை என்று அடித்துச் சொல்கிறது ஒரு தரப்பு. கேரளாவின் குற்றச்சாட்டைத் தொடர்ந்து 1981 முதல் 1994 வரை மூன்று முறை அணை பலப்படுத்தப்பட்டது. 24 அடி அகலம், 3 அடி உயரத்தில் 1200 அடி நீளத்துக்கு, 12000 டன் எடையுள்ள கான்கீரீட் போடப்பட்டு அணை பலப்படுத்தப்பட்டது. மேலும், அணையின் பின்புறத்தில் தாங்கு அணையாக 135 அடி உயரத்தில், 1700 அடி நீளத்தில் 33 அடி அகலத்தில் மூன்று லட்சம் டன் கான்கீரீட் கொண்டு பிணைக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்படும். அணை உடையும். 40 லட்சம் மக்கள் இறப்பார்கள் என்று பிரச்னையை ஊதிவிடுகிறது கேரளா. உண்மையா?

உண்மையல்ல. நிலநடுக்க பயத்தை போக்கும் வகையில் அணையின் 1200 அடி நீளத்தில் 9 அடி இடைவெளி விட்டு 4 அங்குல விட்டத்தில் 95 துளைகள் இடப்பட்டு, அதிலிருந்து கம்பிகளை இழுத்து அணையின் கீழ் மட்டத்தில் 30 அடிக்கு கீழே உள்ள பாறைகளின் உள்ளே சொருகி, அதைக் கான்கீரீட் கலவையைக் கொண்டு உறுதிப்படுத்தி, 20 டன் எடையைத் தாங்கும் அளவுக்கு இறுக்கி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இதனால் நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அணைக்குப் பாதிப்பு வராது. அணை முன்பைவிட மூன்று மடங்கு வலுவாக உள்ளது.

நிலநடுக்கம் தொடர்பாக இந்திய தர நிர்ணயம் 2002ல் வெளியிடப்பட்ட தகவல்படி முல்லைப் பெரியாறு அணை, இடுக்கி அணை, சென்னை நகரம் உள்ளிட்ட பகுதிகள் நிலநடுக்க மண்டலம் 3இல் உள்ளன. அதாவது 3.5 முதல் 4.2 வரை ரிக்டர் அளவுகோலில் நில அதிர்வு - நில நடுக்கம் பதிவாகும் எனக்கூறுகிறது. இந்த அதிர்வால், அணைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. அப்படியே அணை உடைந்தாலும், நீர் இடுக்கி அணைக்குத்தான் செல்லும். இடைப்பட்ட தூரம் 48 கிமீ. இடுக்கி அணை 555 அடி உயரத்தில் கேரள அரசு கட்டியுள்ளது. முல்லைப் பெரியாறு அணையைவிட மூன்றரை மடங்கு பெரியது. கொள்ளளவில் ஏழு மடங்கு பெரியது.

அணை கட்டப்பட்ட நாளிலிருந்து பலமுறை நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது. அணை பலமாகத்தான் உள்ளது. கேரளா பூகம்ப மண்டலம் 3ல் உள்ளது. அப்படிப்பார்த்தால் கேரளாவில் உள்ள அத்தனை அணைகளும் உடையும் அபாயத்தில் உள்ளதா? அப்படியானால் கேரளாவில் உள்ள அனைவரும் வெளியேறி வேறு இடங்களுக்கு சென்று விடுவார்களா?
23.10.1979 மலையாள மனோரமா இதழில் முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்று எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பின் அணையின் நீர்மட்டம் 152 அடி உயரத்திலிருந்து 136 அடி உயரத்திற்கு குறைக்கப்பட்டது. அதன் பின்னும் அணை பலவீனமாக இருப்பதாக கேரள அரசு வழக்கு தொடர்ந்தது. 27.02.2006 இல் உச்ச நீதிமன்றம் அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்று தீர்ப்பு அளித்தது. இந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்காக கேரள அரசு சட்டப் பேரவையில் கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (சட்டத் திருத்த) மசோதா 2006 என்ற பெயரில் ஒரு மசோதாவை நிறைவேற்றியது. இதன்படி கேரள அரசின் அனுமதி இல்லாமல் அணைகளின் நீர்மட்டத்தை பிற மாநில அரசுகள் அதிகரிக்கக்கூடாது. இது உச்ச நீதிமன்ற தீர்ப்பை மீறிய செயலாகும் (contempt of court)..

இதைத் தவிர மூன்றுவிதமான தடைகளை ஏற்படுத்த கேரள அரசு முயற்சி செய்து வருகிறது.

1. 1886 இல் திருவாங்கூர் சமஸ்தானத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்து கொண்ட 999 ஆண்டு ஒப்பந்தம் செல்லாததாக்குவது
2. நிலநடுக்கப்பகுதி என்று கூறி பெரியார் அணையை உடைப்பது
3. பெரியார் பகுதி வனவிலங்குகளுக்கும், சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறுவது

கடந்த செப்டம்பர் மாதம் ஆனந்த் கமிட்டியிடம், கேரள அரசு புதிதாக அணை ஒன்றை பெரியார் அணைக்கு கீழே கட்டப்போவதாக திட்ட அறிக்கை ஒன்றை அளித்தது. அதில், அணையில் போதுமான தண்ணீர் இருக்கும் பட்சத்தில் மற்ற மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று பக்கம் 23ல் கூறப்பட்டுள்ளது. ஆனால், பக்கம் 37ல் தமிழகத்துக்கு முல்லைப்

பெரியார் அணையில் எந்தவிதமான பாரம்பரிய உரிமையும் இல்லை என்று கூறியுள்ளது. கேரள அரசின் திட்டம் நிறைவேறுமானால், தமிழகத்திற்கு தண்ணீர் கிடைக்காது. 2 லட்சத்து 8 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடும். 10 லட்சம் மக்களுக்கு குடிநீர் கிடைக்காமல் போய்விடும்.

பிரச்னைகளை விவாதிப்பதை இத்தோடு நிறுத்திக்கொள்வோம். ஏதாவது தீர்வு கிடைக்குமா என்று யோசிக்கும்போது நம் பள்ளிக்கூட நாட்கள் நினைவுக்கு வந்தது.

பள்ளிக்கூடத்திலிருந்து ஓடிவந்தான் ஒரு சிறுவன். 'அம்மா டிராயர் கிழிஞ்சுப்போச்சு', பின்புறத்தில் கிழிந்த டிராயைரைக் காண்பித்தான். சிறுவனை அழைத்துக் கொண்டு தையற்காரரிடம் சென்றார் அம்மா.
"கிழிந்த இடத்தில் ஒட்டுப்போடணும். அப்பதான் ஸ்டிராங்கா இருக்கும்" என்றார் தையற்காரர்.
"அதெல்லாம் அசிங்கமா இருக்கும். கிழிஞ்சதும் தெரியக்கூடாது. தைச்சதும் தெரியக்கூடாது.

அதுமாதிரி தைச்சுக்கொடுங்க", என்றார் அம்மா.
தைத்துக்கொடுத்தார் தையல்காரர். சிறுவனைப் பார்த்து பேசினார் அம்மா.
"டிராயரை தைச்சாச்சு. கீழே உட்காரும் போது ஜாக்கிரதையா உட்காரு", என்றார் அம்மா.
"தைச்சது வெளியே தெரியாம இருக்கறது முக்கியமா? அல்லது மறுபடியும் கிழியாம இருக்கறது முக்கியமா? கிழிஞ்சது உண்மைதானே? மத்தவங்களுக்கு தெரிஞ்சா என்ன?", என்றான் சிறுவன்.

சிறுவனின் கேள்வி யதார்த்தமானது. கிட்டத்தட்ட நம்முடைய ஜனநாயகமும் கிழிந்து டிராயரைப் போலத்தான். நமது பிரச்னை என்ன? நமது தேவை என்ன என்பதை வெளிப்படையாக சொல்லும் மனப்பாங்கு நம்மிடையே இல்லை. எனக்குத் தேவை தண்ணீர். எனக்குத் தேவை மின்சாரம். என்பதை வெளிப்படையாக சொல்வதற்கு மனமில்லை. அதைவிட்டுவிட்டு வெவ்வேறு பிரச்னைகளை கையிலெடுப்பது, சாதாரண சிக்கலை இடியாப்பச் சிக்கலாக மாற்றிவிடுகிறது.

எனக்கு தேவை மின்சாரம். அதைக்கொடுங்கள் என்று கேட்பதில் நியாயமிருக்கிறது. அதே போல் எனக்கு தண்ணீர் வேண்டும் என்று கேட்பதிலும் நியாயம் இருக்கிறது. அதைவிடுத்து எல்லாப் பிரச்னைகளயும் ஆறப்போடுவது புத்திசாலித்தனமான தீர்வாகாது. ஆட்சியாளர்கள் பிரச்னைகளை ஆறப்போடுகிறார்கள். ஆனால் இரு மாநில உறவு அழிந்துகொண்டிருக்கின்றதே! அதை யார் சீர் செய்வது? எதை எடுத்தாலும் கோர்ட் சொல்லட்டும் என்று கோர்டின் மீது பழியைப் போட்டு தப்பிக்க நினைக்கு ஆட்சியாளர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

காவிரிப் பிரச்னை. டிரிபியூனல் சொன்ன தண்ணீர் அளவை கர்நாடகா கொடுப்பதில்லை. இது நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பாகாதா? நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்த ஏன் தவறிவிட்டோம். தவறவிட்டது யார்? இட ஒதுக்கீடு கொள்கை ஒவ்வொரு ஆண்டும் மீறப்படுகிறது. அது நீதி மன்ற அவமதிப்பு செயல் இல்லையா?

நீதிமன்றங்களில் பிறப்பிக்கப்பட்ட பல உத்தரவுகளை அரசே பின்பற்ற முயற்சிக்காத போது, எத்தனை வழக்குகளை போட்டாலும், தீர்ப்புகளை பெற்றாலும், பயனில்லை.
விஷயங்களை ஆறப்போடும் முறை. இதுவரை எத்தனை முறை கைகொடுத்திருக்கிறது? தெலுங்கானா, லோக்பால் போன்ற பிரச்னைகள் ஆறப்போடப்பட்டுள்ளது. முடிவு கிடைத்ததா?

இப்படி பிரச்னைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். விடை கிடைக்காது. பிரச்னையை யாராவது தீர்க்கட்டும். நம் காலத்தில் பிரச்னையைத் தொடவேண்டாம் என்று தப்பித்துக்கொள்ளும் ஆட்சியாளர்களின் மனப்பான்மை எல்லோரையும் சங்கடத்தில் தள்ளிவிடுகிறது.

சிலர் நதிகளை தேசிய மயமாக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், தேசியமயமாக்கப்பட்ட பலவிஷயங்கள் ஆட்சியாளர்களின் கையில் சிக்கித் தவிப்பதை பார்க்க முடிகிறது. இவற்றிற்கெல்லாம் காரணம், பிரச்னைகளை, பிரச்னைகளாக மட்டும் பார்க்கும் எண்ணம் அரசியல்வாதிகளுக்கு வேண்டும்

எல்லாவற்றையும் ஓட்டுக்களாக கணக்கிட்டால், யாருமே நிம்மதியாக தூங்க முடியாது. ஓட்டுக்களை மறந்து, உண்மைகளை மனத்தில் கொண்டு முடிவெடுத்தால், சில மணித்துளிகளே போதும். அத்தனை பிரச்னைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகும்.

இதெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். கடைசியாக மனதை நெருடும் ஒரு விஷயம். தன்னுடைய சொத்து, தன் மனைவி அணிந்திருந்த நகைகளைக்கூட மிச்சம் வைக்காமல் விற்று முல்லை பெரியார் அணையை கட்டினார் பென்னி குயிக். கட்டுமானம் நடந்து கொண்டிருந்த போது அதை பார்க்க வந்தாள் அவரது எட்டு வயது செல்ல மகள். மேலிருந்து அவள் தலையில் ஒரு கல் விழுந்தது. துடிதுடித்து இறந்துபோனாள். தன் ஆசை மகளை அங்கேயே புதைத்தார். புதைத்த இடத்தில் அவளது நினைவாக ஒரு கல்லறையை எழுப்பினார். அணைக்காக தன்னுடைய சொத்துக்களை மட்டும் இழக்கவில்லை. தன்னுடைய சின்னஞ்சிறு மகளை களபலியாக தந்திருக்கிறார் பென்னிகுயிக். இன்றும் முல்லை பெரியாரின் சலசலப்பு ஓசையையே தாலாட்டாக எண்ணி உறங்கிக் கொண்டிருக்கிறது அந்த சின்னஞ்சிறிய ஆன்மா. அதை எழுப்பி உட்கார வைத்துவிட்டது இரண்டு மாநில போராட்டங்கள். இந்த போராட்டங்கள் ஓய்ந்தால் நாம் மட்டுமல்ல, அந்த சின்னஞ்சிறு ஆன்மாவும் அமைதியில் உறங்கும். அதுதான் பென்னிகுயிக்கிற்கு நாம் செய்யும் நன்றிக்கடனாக இருக்கும்.

நன்றி பிரச்சினையின் ஆழத்தில் தீர்வுகளைத் தேடி உங்களுடன், **இலால்குடி நடராஜன்** மற்றும் எனது பள்ளி நண்பன் எழுத்தாளர் **இலால்குடி சாது ஸ்ரீ ராம்**



**பென்னி குயிக்**

**நன்றி: Chennai365.com**

# VALUE OF LIFE

Balaji Panchapakesan

**"Whatever you took, you took from God. Whatever you gave, you gave to him. You came empty handed, you will leave empty handed." - Bhagavath Gita.**

We are living in an era where we all have forgotten the above simple principle of life. 99.99% of the people out there want to earn more than their parents, siblings, friends, neighbors etc. Bitter truth of life lies in the simple principle quoted above. We look at every other person we encounter as a competitor in one way or other.

It starts from the first child to parents, the second child becomes competitor; For parents, in school, mark scored by child of their friend ; etc.. You can quote so many things in life that makes us feel, we are competing with someone every moment. This basic feeling of competition gives the feeling to win. Definition of win in life also changes every moment, for Sachin Tendulkar , winning world cup was winning; now he is chasing 100th hundred; and tomorrow something else.

How market defines life of many?

As NRIs, we have xe.com in our brain that converts every JPY we earn. No wonder, India and China accounted for most dollar transfers in last few years. How many of us have postponed buying a thing that we like now , as exchange rate makes us feel better to save it for future? It is not a uncommon and definitely not something to be ashamed of. Our culture has taught us to take care of our children's future. But, are we forgetting something that our parent's taught?




Most of us are here by the virtue of our education and our effort in a foreign land to make a life for us. Our parent's taught us values, ethics and way of life more than giving us money for our future.

Discover yourself? Breaking out of monotony of work and weekends and making life useful and interesting comes only with passion to discover yourself.

At different point in our life time, every individual gets a passion to create some value [to himself, to society, to his children]. But the passion dies out sooner or later and life gets into a cycle once again. Keeping the passion alive is first thing to have a wonderful life. This helps in overcoming the midlife crisis. To do things that will make your life interesting, first define "What is Enough?" to yourself. This is the most difficult question to answer, as this will lead you to another question - "Against what or who should I measure?".

If you can successfully define "Enough" to your satisfaction that means you have come to terms with your life and ready to move on.

**Values**

If you look at every aspect of life, you can identify a value associated with each aspect . To make it simple, you see a beautiful car, you first try to see how much it costs, then we immediately try to see its features [ read value] to see justification for the price.

For human, we look at great individuals during their life or after, the value they would have created for others will place them has determined how well they will be remembered? People higher up the list are all individuals who redefined the ways of life [Gandhi, Mandela, Mother Teresa , Edison, Einstein, Steve Jobs, Bill Gates and many].

For some of them, money they got was a by-product of the values they created. The drive for these business men was not money, but passion to make a difference and create "Value".

IT'S NOT THE YEARS IN YOUR LIFE THAT COUNT. IT'S THE LIFE IN YOUR YEARS!

- ABE LINCOLN

"**Enough**"

To have a better tomorrow, let us teach our children the power of "**Enough**" by teaching values and ethics.

"A man is best remembered by number of people feeling sad when he leaves the world and not by how much money he left".

# விடுகதைகள் – Ramanathan

1. சின்ன சின்ன கதவுகள், தச்சன் செய்யாக் கதவுகள், கதவடைக்கும் ஸத்தம் காதுக்கே கேட்காது அது என்ன?

2. தாளை கொடுத்தால் தின்னும் தண்ணீர் குடித்தால் மடியும் அது என்ன?

3. கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு கதவு இல்லாத வீடு காற்று அடித்தால் ஆடும் வீடு அது என்ன?

4. ஆழ் கடலில் கிடைத்தவனுக்கு ஆனை விலை குதிரை விலை அவன் யார்?

# GLIMPSES OF PONGAL 2011



















# GLIMPSES OF 20TH YEAR PONGAL
















# CELEBRATIONS IN TOKYO(2011)










# வீடு

ஸரஸ் ஜீவானந்தம்




வீடு மாற வேண்டும். இந்த வீட்டை புதுப்பிக்கப் போகிறார்கள். அதனால் வேறு வீடு தேட வேண்டும் என்று 2011 வருட ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டார்கள். அதைக் கேட்டதிலிருந்து எனக்கு ஒரே வருத்தம்!

"இந்த வீட்டில் இடமே போதலை. இன்னும் கொஞ்சம் 'space' வேணும்," என்று எத்தனை முறை புலம்பியிருப்பேன்? எவ்வளவு குறை பட்டிருப்பேன்? இப்பொழுது வாய்ப்பு வந்திருக்கிறது. ஆனால் ஏன் வருத்தப்படுகிறேன்? மனித மனம் என்பது எவ்வளவு விந்தையானது பாருங்கள். வேண்டும் வேண்டும் என்று வேண்டிய ஒரு பொருள் கிடைக்கும்போது அதை ஏற்றுக்கொள்ள தயங்குகிறது; காரணங்களைத் தேடுகிறது. "மனமே உன்னோடு வாழ்தல் அரிது!"

ஆனால் எனக்கு விட மனமில்லாதது அந்த வீடு இல்லை; 17 வருடங்கள் வாழ்ந்த முசாஷினோ-ஷி என்கிற அந்த இடம் தான். சின்ன சின்ன கடைகளை கொண்ட மித்தாகா (Mitaka) ரயில் நிலையம்; அங்கேயிருந்து நீள செல்லும் பாதையின் இருபுறமும் உயர்ந்து நிற்கும் இச்சோ மரங்கள் (இலையுதிர் காலத்துக்கு முன்னால் இவை தங்க நிறமாக மாறி ஜொலிப்பது கண்கொள்ளா காட்சி); இதையெல்லாம் தாண்டி வந்தால் ஒரு நீள கடைத்தெரு. பூக்கடை, காய்கறி கடை, கேக் கடை, சூப்பர்மார்கெட், குழந்தைகளின் காப்பகம் (Nursery), டாக்டர், மருந்துக் கடை, முடி திருத்தும் நிலையம், என்று அந்த தெருவில் இல்லாதது இல்லை. இந்த தெரு முனையைத் தாண்டினால் என் வீடு. வீட்டுக்குப் பின்புறம் போனால் வயலும் வாழ்வும் தான். காய்கறித் தோட்டம், பூங்கா என்று பச்சை பசேல் என்று இருக்கும். நடப்பதற்கு சுகமான பாதைகள் பல பல. சைக்கிள் ஒட்டிக்கொண்டு போவது மற்றுமொரு இனிமையான அனுபவம். டோக்கியோவுக்குள் இருந்தாலும் ஒரு நகரத்துக்கு தேவையான எல்லா வசதிகளும் இருந்தாலும், அதே சமயம் ஒரு சின்ன ஊரில் வாழ்வது போன்ற ரம்மியமான சுற்றுபுறம். தெரிந்த முகங்கள், பழகிய மனிதர்கள். இப்படிப்பட்ட இடத்தில் மனம் ஒன்றி 17 வருடங்கள் வாழ்ந்திருக்கிறோம்! இதை விட்டுப்போக எனக்கு எப்படி மனம் வரும்? மித்தாகாவில் தான் வீடு தேட வேண்டும் என்பதில் நான் பிடிவாதமாக இருந்தேன்.

வீடு தேடும் படலம் ஆரம்பித்தது, தொடர்ந்தது. ஆனால் ஒன்றும் சரியாக அமையவில்லை. ஒன்றா, சின்னதாக இருந்தது அல்லது ரொம்ப பழைய வீடாக இருந்தது. ஒரு வழியாக, பிப்ரவரி மாதக் கடைசியில் பார்த்த ஒரு அபார்ட்மென்ட் நன்றாக இருந்தது. ஆனால் அது மித்தாகாவில் இல்லை. இரண்டு ஸ்டேஷன் தள்ளி நிஷி ஒகி (Nishi Ogi) என்கிற இடத்தில் இருந்தது. அங்கே சுற்றுபுறத்தில் மரங்களும் இல்லை, பசுமையும் இல்லை. எங்கே பார்த்தாலும் ஒரே கட்டடக் காடு (concrete jungle)!

என் கணவர் உடனே "இந்த வீடு நல்லா இருக்கு. இதையே முடிவு பண்ணிடலாம்" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார். ஆனால் நான் கொஞ்சமும் தயாராக இல்லை. "ஏன் இப்படி மித்தாகாவையே பிடித்துக் கொண்டு இருக்கிறாய்?"என்று அலுத்துக்கொண்டார். என்ன சொல்லிப் புரியவைப்பது? "எப்படியும் மாற்றம் வரத்தான் போகிறது. அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்" என்று உள்மனம் சொல்லிக்கொண்டே இருந்தது. நான் காதில் போட்டுக்கொள்ளத் தயாராக இல்லை. நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் கடைசி வரை ஒன்றும் சரிப்பட்டு வராததால், நிஷி ஒகி வீட்டையே முடிவு செய்ய வேண்டியதாயிற்று. தன்னுடைய எடையினால் தாங்கிக்கொள்ளும்




மார்ச் 11 வந்தது. நானும் நாலைந்து தோழிகளுமாக சிபா (Chiba)-வில் இருக்கும் ப்ரீதி வீட்டுக்கு பூஜைக்குப் போனோம். பூஜை முடிந்து, சாப்பிட்டு, அவரவர் வீட்டுக்கு கிளம்பினோம். நானும் இரண்டு தோழிகளும் ப்ரீதியின் காரில் ரயில் நிலையத்திற்குப் போய்க்கொண்டிருந்தோம். இன்னும் இரண்டு நிமிடத்தில் ரயில் நிலையம் வந்துவிடும். மணி மதியம் 2.46. நிலம் நடுங்கியது. கார் பெரிதாக ஆடவே, நிறுத்தினாள் ப்ரீதி. மரங்களும் விளக்குக் கம்பங்களும் பலமாக ஆடுவது தெரிந்தது. "அங்கே பாருங்க!" என்று அருணா கத்தினாள். காருக்கு முன்னால் குறுக்கே கோடு போட்டதுபோல் ரோடு விரிசல் விட்டுக்கொண்டே போயிற்று.

லேசாக புகை கிளம்பியது. காரை விட்டு அவசரமாக இறங்கினோம். ரோட்டில் போக்குவரத்து நின்று போயிற்று. "அதை பாருங்க!" மீண்டும் அருணா அலறினாள். எங்கள் பக்கத்தில், நடைபாதையின் ஒரு முனை வெடிப்பது போல் மேலே கிளம்பி வந்துகொண்டிருந்தது. செய்வதறியாமல் திகைத்துப்போய் காரைப் பிடித்துக்கொண்டு நின்றோம். மெல்ல மெல்ல நிலநடுக்கம் அடங்கியது.

ப்ரீதி எங்களை ரயில் நிலையத்தில் இறக்கிவிட்டு தன் குழந்தையின் பள்ளிக்கு அவசரமாகப் போனாள். ரயில் நிலைய வாசலில் நின்றிருந்தபோது இரண்டாம் முறையாக நிலநடுக்கம் வந்தது. அருகிலிருந்த உயரமான கட்டிடங்களிலிருந்து மக்கள் வெளியே ஓடி வந்துகொண்டிருந்தார்கள். ரயில்கள் நின்று போயிருந்ததால் மக்கள் செய்வதறியாது நின்றிருந்தார்கள். காலுக்கு அடியில் பூமி அதிர்ந்தது. கீழேயிருந்து வெடித்துக்கொண்டு தண்ணீர் வர, சேரும் சகதியும் எங்கும் பரவியது. (அது கடலைத் தூர்த்து சமவெளியாக்கப்பட்ட இடம் (reclaimed land) என்று சொன்னார்கள்.) நாங்கள் அவசரமாக ரோட்டை கடந்து மறுபுறம் போனோம். எங்கே போவதென்று தெரியாமல் சிறிது நேர குழப்பத்துக்கு அப்புறம் கூட்டத்தைத் தொடர்ந்து நடந்தோம். வழியெங்கும் பிளவு பட்ட தெருக்களும் சேற்றுத் தண்ணீருமாக இருந்தது. இன்னொரு ரயில் நிலையத்தை அடைந்தோம்.

“பூமி அதிர்ச்சி காரணமாக ரயில்கள் நின்றுவிட்டன, எப்போ மறுபடியும் ஆரம்பிக்குமென்று தெரியவில்லை” என்கிற ஒலிபரப்பு வந்துகொண்டிருந்தது. நிறைய நேரம் வெளியே நின்றோம். வெயில் மங்கி இருள் சூழ ஆரம்பித்தது. நல்ல குளிர். அதற்க்கு மேல் ரோட்டில் நிற்க முடியாமல் ரயில் நிலையத்தின் உள்ளே போனோம்.

நிலநடுக்கம் (after shocks) நிற்கவேயில்லை. சின்னதாகவும் பெரியதாகவும் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தது. இவ்வளவு நேரமும் எங்கள் யாருடைய செல் போனும் வேலை செய்யவில்லை. யாரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை. இங்கே சிபாவில் இப்படி இருக்கிறது. டோக்கியோவில் நிலைமை என்ன? அங்கேயும் நில அதிர்ச்சி இருந்ததா? என் கணவர் எப்படி இருக்கிறார்? ஆபீசில் பத்திரமாக இருக்கிறாரா? என் தோழிகள் எல்லாரும் எங்கே, எப்படி இருக்கிறார்கள்? என் வீட்டின் நிலைமை என்ன? சாமான்கள் எல்லாம் விழுந்து உடைந்துவிட்டதா? வீடு இருக்கிறதா இல்லையா? ஒன்றும் தெரியவில்லை. என் கூட இருந்த தோழிகள் இருவரும் அவரவர் குழந்தைகளைப் பற்றி கவலைப்பட்டு கண்ணீர் விட ஆரம்பித்திருந்தார்கள். போன் தொடர்பு கிடைக்காததில் கவலையும் பயமும் அதிகரித்தது.

ப்ரீதிக்கும் போன் செய்து பார்த்து களைத்தோம். நேரம் போய்க்கொண்டிருந்தது. 7 மணியளவில் என் கணவரிடமிருந்து போன்! “நான் இப்போ வீட்டில் இருக்கேன். இங்கே ஒன்றும் சேதம் இல்லை,” என்று அவர் சொல்லி முடிக்கும்போது தொடர்பு துண்டிக்கப்பட்டது. அப்பாடா! பத்திரமாக இருக்கிறார். அடுத்த சில நிமிடங்களில் தோழிகள் இருவரின் குழந்தைகளும் பத்திரமாக இருப்பதாக பள்ளிக்கூடத்திலிருந்து போன் வந்தது. நல்ல ஆறுதல்

நாங்கள் என்ன செய்வது? இப்படியே எவ்வளவு நேரம் குளிரில் நடுங்கிக்கொண்டு ரயில் நிலையத்தில் இருப்பது? ஒன்றும் புரியவில்லை. ப்ரீதியின் வீட்டுக்குப் போக வழி தெரியாது. புது இடம், இருட்டு, குளிர். மணி எட்டை நெருங்கிக்கொண்டிருந்தது. கொஞ்சம் பசியும் வந்தது. சரி, பக்கத்தில் கடை இருக்கும், ஏதாவது வாங்கி சாப்பிடலாம் என்று புறப்பட்டோம். 2-3 நிமிட தூரத்தில் இருந்த கடையில் பிஸ்கெட்டும் சாக்லேட்டும் மட்டும் தான் கிடைத்தது. வாங்கிக்கொண்டு திரும்பி ரயில் நிலையத்தை நோக்கி நடந்தோம். வழியில் ஒரு சின்ன கடை வாசலில் கூட்டம். எல்லாரும் TV யை பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள். நானும் எட்டிப் பார்த்தேன். அதிர்ந்தேன்.

அப்பொழுது நான் பார்த்த காட்சி என் வாழ்நாளில் மறக்க முடியாத காட்சியாகிவிட்டது! ஆமாம், செந்தை (Sendai) விமான தடத்துக்குள் பிரளயம்- சுனாமி வந்துகொண்டிருந்தது! வேகமாகப் புரண்டு வரும் கருநிற பெருவெள்ளம்! பின்னணியில் நிலநடுக்கமும் சுனாமியும் ஏற்படுத்திய சேதத்தைப் பற்றிய தகவல்! மதியம் 2.46 க்கு வந்த நிலநடுக்கம் டோக்கியோவிலிருந்து 400 கிலோமீட்டருக்கும் மேற்பட்ட தொலைவில் உள்ள இடத்தில் ஏற்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து சுனாமி! இவ்வளவு நேரம் இந்த விவரம் எதுவும் தெரியாமல் இருந்திருக்கிறேன்!

ரயில் நிலையத்துக்கு திரும்பினோம். "ரயில் இனி ஓடாது, பக்கத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்தில் இரவு தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்று ஒலிபெருக்கியில் சொன்னார்கள். அங்கேதான் போகவேண்டும் போலிருக்கிறது என்று நாங்கள் பேசிக்கொண்ட போது ப்ரீதியின் போன் வந்தது! "அங்கேயே இருங்கள். நான் காரில் வந்து கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றாள். நாங்கள் காத்திருந்தோம்

மனம் துக்கத்தில் கனத்தது. இன்று காலை எழுந்த போது, வெளியே கிளம்பியபோது, மதியம் சாப்பிட்டபோது, இப்படி ஒரு சேதம் வரும் என்று யாராவது எதிர்பார்த்திருப்போமா? இரண்டு நிமிட நில அதிர்வில், இரண்டு நிமிட சுனாமியில் எத்தனைபேருடைய வாழ்க்கை தலை கீழாகிவிட்டது! யார், யாருக்கு என்ன கெடுதல் செய்தார்கள்? இது என்ன தண்டனை? இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தபோது திடீரென்று என் மனதில் சுரீர் என்றது!

சில நாட்கள் முன்னால் வரை “எனக்கு அந்த வீடு பிடிக்கலை, இந்த வீடு பிடிக்கலை, அது சின்னது, இது பழசு, மித்தாகாவை விட்டுப் போகமாட்டேன்,” என்று என்னவெல்லாம் பேசியிருக்கிறேன்? ஒரு ‘சாய்ஸ்’ இருந்ததினால் தானே அப்படி பேச முடிந்தது? இன்று கிராமங்களும், ஊர்களும் வெள்ளத்தில் அழிந்துகொண்டிருந்தன. அலையோடு சேர்ந்து மக்களும் வாகனங்களும் அடித்துக்கொண்டு செல்லப்பட்டார்கள். வீடு வாசல் இல்லை. குடும்பம் இல்லை. எதுவும் இல்லை.

எங்கும் பெருநாசம்! துக்கத்துக்கும் கண்ணீருக்கும் நடுவில் அன்று மனத்தில் ஒரு முடிவு செய்தேன். இனி குறை சொல்லப் போவதில்லை. பார்த்திருக்கும் புது வீட்டில் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் இருக்க முழு முயற்சி செய்வேன்.

இன்று, "நீங்கள் மித்தாகாவை 'மிஸ்' பண்ணலையா?" என்று யாராவது கேட்டால், இல்லை என்று சொல்லமாட்டேன். 'மிஸ்' பண்ணுகிறேன். அவ்வப்பொழுது ஒப்பிட்டு பார்க்கிறேன். ஆனால் குறை கண்டுபிடிப்பதில்லை; நிறைகளை நினைத்துப் பார்க்கிறேன். மித்தாகாவின் அந்த சுறுசுறுப்பான கடைவீதியும், பசுமையான தோட்டங்களும், அழகான சுற்றுப்புறமும் அங்கே தானே இருக்கின்றன? அழிந்துவிடவில்லையே? எனக்கு வேண்டும் என்கிறபோது நான் போய் பார்த்துக்கொள்ளலாமே!

வாழ்க்கையில் நான் நன்றி சொல்லவேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

**ஸரஸ் ஜீவானந்தம்**




# கிரிக்கெட்

ஒரு இனிய மாலைப்பொழுது, கிரிக்கெட் பிரியரான தாத்தா என்றும் இல்லாத குதூகலத்தோடு இருந்தார். உலகக்கோப்பை கிரிக்கெட் இந்தியா-இலங்கை இறுதி, முடியப்பொகும் நேரம், நூவன் குலசேகரா வீசிய பந்தில் தோணி ஆறு அடிக்க-இந்தியா வெற்றி-தாத்தா மேலும் பரபரப்பனார். இந்தியா கோப்பையை பெற்றது-பரபரப்பு தீவிரம் ஆனது, தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறைவு-தாத்தா ஒரே சோகம். என்னவென்று கேட்டால், அழகி பூனம் பாண்டே,இந்தியா வெற்றி பெற்றால் அரை நிர்வாணமாக வருவேன் என்று சொன்னது நடக்கவில்லையே என்றார்!! அட இதுதானா விஷயம்....இன்று இந்த முக்கியமான விளையாட்டிலிலும் இத்தகைய ஆர்வ தூண்டில்கள் தேவைப்படுகிறது...

ஈ,காக்கை இல்லாத ஐந்து நாள் போட்டி காலத்திலிருந்து இருபது ஓவர் காலத்திற்கு வந்து விளயாட்டை கேளிக்கையாகவும், பொழுதுபோக்காகவும் பார்க்க ஆரம்பித்து உள்ளோம். கேளிக்கை என்று சொல்கின்றபோதே பணத்தன்மை மிக முக்கியமான அம்சமாகிவிடுகிறது. இந்தியாவின் ஐந்தாவது மதமாக கருதப்படும் கிரிக்கெட்டிர்கே இந்த கதிஎன்றால், மற்ற விளையாட்டுதுறைகளின் நிலை எம்மாத்திரம்.

பொதுவாகவே நம் நாட்டு மக்களுக்கு விருப்பங்களையும், தேவைகளையும் சமாந்திரமாக பார்க்கும் மனப்போக்கு கிடையாது. பெரும்பாலும் தேவைகளின் அடிப்படையிலேயே விருப்பங்களை (அல்லது விருப்பங்கள் என சொல்லப்படுவதை) சீர் அமைத்து கொள்கிறோம். பொறியாளர்

ஆகவேண்டும், கணினி வல்லுநர் ஆகவேண்டும், மருத்துவர் ஆகவேண்டும்......நல்ல வருமான வாய்ப்புகள் பெற்று தரும் தொழில்களையே நாடிச்செல்கிறோம். விளையாட்டுத்துரையும் இதற்கு விதிவிலக்கல்ல. சமூக காரணிகளாக விளங்கும் செய்தித்தாழ்கள், பெரும் முதல்தாரர்கள், கல்வி நிறுவனங்கள்....இந்நிலையை மேம்படுத்த முனைவதில்லை. இவர்களால்தான் இன்றைய கிரிக்கெட் வீரர்கள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அதே காரணத்தினால் மற்ற விளையாட்டுத்துறை வீரர்களின் பொருளாதார தகுதி குறைவானவர்களாகவும் இருக்கிறார்கள்.



உதாரணமாக, ஒரு இந்திய ஹாக்கி வீரரின் ஒரு கோல், தலா ஆயிரம் ரூபாய் ஊக்க தொகையாக பெற்று தருகிறது. இதுவே கிரிக்கெட் என்றால்........அனைவருக்கும் தெரியும். இத்தகைய சமுதாய அங்கீகாரமின்மை அதன் விளைவாக மற்ற விளையாட்டு துறைக்கான அடிப்படை வசதிகள், பயிற்சி அமைப்புகள், தேவையான ஆதரவாளர்கள் இல்லை என்ற நிலை நீடிக்கின்றது.

துப்பாக்கி சூடும் வீரரான அபினவ் பிந்த்ராவின் குடும்பம் வசதியானது என்பதால் நல்ல ஆதாரம் கொண்டு இந்த அளவுக்கு முன்னேற முடிந்தது. அவரை போலவே திறமையுள்ள ஆனால் வசதியற்ற வீரர்கள் இம்மி அளவும் முன்னே வரமுடியவில்லை. இதைப்போன்று ஒப்பான மற்ற விளையாட்டு துறைகளிலும் வீரர்கள் குறைந்துகொண்டே வருகிறார்கள். இந்நிலையில் மிக அகன்ற அளவில் ஊழல்கள்,

நேர்மையின்மை பணமோகத்தினால் ஏற்படும் பாதிப்புகள் வேறு... சிறிய தீவு நாடான கியூபாவில் விளயாட்டிற்கு ஆணிவேர் ஆன உடற்பயிற்சி இலவசமாக ஆனால் கட்டாய கல்வியாக வழங்கப்படுகிறது. உதாரணமாக, முன்னோடியாக பல தேசங்கள் உள்ளன...

இந்தியாவில் விளையாட்டும் ஒரு கலாசாரமாக ஆகவேண்டும், பாவிக்கப்படவேண்டும். விளையாட்டு பயிற்சியாளர்களின் அங்கீகாரம் ஒரு கல்லூரி பேராசிரியரின் அங்கீகாரத்தின் அளவிற்கு உயரவேண்டும். இதை நம் மனதில் வேர் போன்று இருக்கும் பாரபட்ச கருத்தை மாற்றுவதின் மூலம் சரியாக்கவேண்டும். தேவைகளையும், விருப்பத்தையும் பாகுப்பாடின்றி சமாந்திரமாக பாவிக்கும் மனப்பான்மை வரவேண்டும். கண்டிப்பாக மாறவேண்டும், மாற்றவெண்டும் என்ற உயர்ந்த, உண்மையான நோக்கம் கொண்டு செயல்படவேண்டும்.

நூற்று இருபது கோடி மக்கள் கொண்ட இந்தியாவின் விளையாட்டு தூதுவர்களாக பதினொரு பேர் மட்டுமே இருக்கும் நிலைமையை மாற்ற வளர்ப்போம், வளர்வோம் !! வாழ்க பாரதம், வளர்க



**நடராஜன் தக்ஷிணாமூர்த்தி**

**RAMANATHAN**

தெரியுமா?

#1 - சாதுக்களுக்கு நிறைய சஹிப்பு தன்மை (resistance power) உண்டு எதனால் தெரியுமா?

#2 - ????

விடை

ஓம் ஓம் (ohm - unit of resistance) என்று சொல்லிக்கொண்டிருப்பார் அதனால் தான்.

# நேதாஜி சுபாஷ் சந்திர போசு

## கோவிந்த்

தோக்கியோவின் மேற்குப்புற நகர்ப்பகுதியான கோயென்ஜியில் பல அடுக்கு மாடி கட்டிடங்களுக்கு நடுவில் மறைந்திருக்கும் ஒரு புத்த மதக்கோவில் ரென்கோஜி. இந்திய விடுதலைப்போரின் மூத்த தலைவரின் சிலை இந்தக் கோவிலில் இருப்பதும் அவரது அஸ்தி இங்கே பாதுகாக்கப்படுவதாக இந்தக்கோவில் நிர்வாகிகள் நம்புவதும் உங்களுக்கு வியப்பளிக்கலாம்.

காங்கிரசின் தலைவராக இருந்து, காந்தியுடனான கருத்து வேறுபாடு காரணமாக தேசிய நீரோட்டத்திலிருந்து பிரிந்து தன்வழியில் தனிவழியில் விடுதலைப்போரை ஆயுதமேந்தி முன்நடத்திய சுபாஷ் சந்திரபோஸ் தான் அந்த தலைவர்..



நேதாஜிக்கும் ஜப்பானுக்கும் உள்ள நெருக்கம் அனைவரும் அறிந்ததே. நேதாஜியின் இந்திய தேசிய ராணுவம் ஜப்பானிய ராணுவத்துடன் இணைந்து ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டு பர்மா,அந்தமான் நிகோபார் தீவுகளைக் கைப்பற்றியது. 1945ஆகஸ்டுமாதத்தில் சைகோனிலிருந்து கிளம்பியவிமானத்தில் ஏறும் வரைதான் அவரைப்பற்றிய உண்மைகள் தெரிந்துள்ளன.

அதன் பிறகு ஏற்பட்டதாகக்கூறப்படும் விபத்து பற்றியோ அதனால் ஏற்பட்ட நேதாஜியின் மறைவுபற்றி உள்ள மர்மம் இன்னும் துலக்கப்படவில்லை.

நேதாஜி ஏறிச்சென்ற அந்த ஜப்பானிய விமானம் தாய்வானில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு கிளம்பிய போது என்ஜின் பழுதடைந்து விபத்துக்குள்ளானதால், ஏற்பட்ட தீப்புண்களால் இறந்துவிட்டதாகவும் அவரது அஸ்தி ஜப்பானுக்கு கொண்டுவரப்பட்டதாகவும் ஜப்பானிய அரசு சொல்லிவருகிறது.

கோவிலை நிர்வாகிக்கும் ஜப்பானிய புத்த பிட்சுக்கள் தலைவருக்குரிய இறுதி மரியாதையை அளிப்பதற்காக, அஸ்தியைதருவதாக இந்திய அரசாங்கத்திடம் முறையிட்ட பொழுதும் அஸ்தியைப்பெற இந்திய அர்சாங்கம் முன்வரவில்லை என்று சொல்லப்படுகிறது.



அவர் உண்மையிலேயே தைவான் விமானவிபத்தில் இறந்தாரா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது. நேதாஜி சைபீரியாவிற்கு த்தப்பி ஓடிவிட்டதாகவும் மேற்கு வங்கத்தில் மறைமுகமாக சாமியாராக வாழ்ந்ததாகவும் உத்தரப்பிரதேசத்தில் பகவான்ஜி என்ற சாமியாராக் வாழ்ந்து மறைந்ததாகவும் என்றும் பலவகையான கதைகள் கூறப்பட்டுவருகின்றன.

நேதாஜியின் மறைவுபற்றி புலன்விசாரணை நடத்த இந்திய அரசாங்கம் பல கமிஷன்களை நியமித்துள்ளது. முகர்ஜி கமிஷன் தனது அறிக்கையில் தைவானில் விபத்து நடக்கவில்லைஎன்றும் ரென்கோஜியில் உள்ள அஸ்தி நேதாஜியுடையது அல்ல என்று திட்டவட்டமாக அறிவித்த்து. இந்திய அரசு இந்த அறிக்கையை ஏற்க மறுத்து விட்டது.

ஆயுதம் ஏந்திப்போராடிய காரணத்தாலா அல்லது இரண்டாம் உலகப்போரின்போது அச்சு நாடுகளுடன் இணைந்த காரணத்தாலா - இந்திய விடுதலைப்போரில் சுபாஷின் பங்களிப்பு சரிவர அங்கீகரிக்கப்படவில்லை. வரலாற்றில் நேதாஜிக்குரிய இடத்தை அளிக்கவும் அவரது இறுதிக்காலம் பற்றிய மர்மங்கள விலகவும் இந்திய அரசு ஆவன செய்யவேண்டும் என்பதே அனைவரின் விருப்பம்.




ஹிகஷி கோஎஞ்சியில் இருந்து ரென்கோஜி
**நன்றி: Google Maps**

# ராஜேந்திரனும், அரைக்கால் ட்ரவுசரும்

இரா.செந்தில்குமார்

விளையும் பயிர், முளையிலேயே தெரியும் என்பது ஏறக்குறைய உண்மைதான் போல. இல்லாவிட்டால், எட்டாம் வகுப்பிலேயே, சீட்டு கட்டி ஏலம் எடுப்பது என்ற அரிய பொருளாதார சித்தாந்தத்தை, எனக்கு புரியும்படி விளக்கிய பிரபு, இன்று மன்னார்குடியில் பெரிய பைனான்சியராக திகழ்வதையும், சிட்டுக்குருவி என்ற கையெழுத்து பத்திரிக்கையில், துப்பறியும்(?) கதை எழுதிய நான், இன்று Blog எழுதி கொண்டிருப்பதையும் எப்படி புரிந்து கொள்வது ? ப்ரோக்ராஸ் கார்டில், தனது அப்பாவின் கையெழுத்தை, தானே போட்டு கடைசி வரை, சேதாரம் இல்லாமல் தப்பித்த முத்துக்குமார், இன்று பெரிய அரசியல்வாதியாய் திகழ்வதும், இதில் சேர்த்தியா? என்றெல்லாம் கேட்டு, என்னை சிக்கலில் மாட்டி விட நினைப்பவர்கள் நிலப்பறிப்பு வழக்கில் கைதாக கடவது.

பல ஆண்டுகளை கடந்த பாரம்பரியமிக்க, ஒரு பள்ளியில்தான் நாங்கள் எங்களது உயர்நிலை கல்வியை தொடர்ந்தோம். பொதுவாகவே, ஆங்கில வழி கல்வி கற்கும் மாணவர்கள் இருக்கும் வகுப்பை சமாளிப்பது, ஆசிரியர்களுக்கு ஒரு பெரிய சவால்தான். காரணம் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாததல்ல. பள்ளியில், தமிழ் வழி கல்விக் கற்கும் மாணவர்கள் அதிகம் என்பதால், வகுப்பின் பிரிவுகளும் அதிகம். எட்டாம் வகுப்பில் பி பிரிவில் இருக்கும் மாணவர் ஒன்பதாம் வகுப்புக்கு வரும்போது சி அல்லது டி பிரிவுக்கு செல்ல நேரிடும். இதனால் நிலையான நட்பு உருவாகும் வாய்ப்பு குறைவு . ஆனால், ஆங்கில வழி கல்வி கற்கும் மாணவர்கள் குறைவு என்பதால், ஆரம்பம் முதல் ஒரே வகுப்பாக இருக்க நேரிடும். மாணவரிடத்தில் ஒரு பெரிய சகோதரத்துவம் நிலவும். ஏறக்குறைய பதினான்கு ஆண்டுகள் ஒன்றாகவே படிப்பதால், அவ்வளவு எளிதாக ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுப்பதில்லை . இந்த ஒற்றுமையை குலைப்பதுத் தான் ஆசிரியர்களின் முதல் சவால். இப்படித்தான், எட்டாம் வகுப்பில் இருக்கும் போது, எங்களுக்கு வரலாறு வகுப்பு எடுக்க வந்த வெங்கட்ராமன், அன்று தலை வலிப்பதால், வகுப்பு எடுக்க இயலாது. நீங்கள் எல்லாம் சத்தம் இல்லாமல் இதுவரை நடத்திய பாடங்களை ரிவைஸ் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு, மேஜையில் தலை சாய்த்து படுத்து கொண்டார். அவர் படுத்து கொண்ட நொடியில், எனக்குள் இருந்த ஜேசுதாஸ் முழித்து கொண்டார். அப்போது பிரபலமாக இருந்த பாடல்களை பாட தொடங்கினேன்.

எனக்கு இடதுக்கை பக்கம் இருந்தவன், அந்த வருடம்தான் நெய்வேலியில் இருந்து மாற்றலாகி, எங்கள் வகுப்பிற்கு வந்து இருந்த கோபாலகிருஷ்ணன் என்ற அப்பிராணி. வலதுக்கை பக்கமோ, எல்.கே.ஜி யில் இருந்து கூடப் படிக்கும் ராஜாராமன். பாடத் துவங்கியபோது மெலிதாக ஆரம்பித்த நான், உற்சாக மிகுதியால் உச்ச ஸ்தாயியில் பாடலானேன் . "ராசாத்தி உன்னை காணாத நெஞ்சு " பாடல் எங்கள் வகுப்பையும் தாண்டி அடுத்த வகுப்பு வரை பரவியது . எங்கள் வகுப்பில் ஆசிரியர் இல்லையோ என்று சந்தேகப்பட்டு ஓடிவந்தார், ஆசிரியர் சாமிநாதன். வெங்கட்ராமன் சாரை எழுப்பி "எவனோ பாடுறான் சார்" என்றார். அவமானத்தில் முகம் சிவந்த வெங்கட்ராமன் , எவண்டா பாடினது? மரியாதையா சொல்லிடுங்க என்றார்.

எவனாவது வாய் திறந்தால் தானே? "டேய் ஒழுங்கா சொல்லிடுங்க. இல்லனா.. நான் ரொம்ப பொல்லாதவன் ஆய்டுவேன்" என்று ஆரம்பித்த வெங்கட்ராமன் சார், நேரமாக ஆக, "பக்கத்துலே உள்ளவனவாது சொல்லிடுங்கடா" என்று கெஞ்ச ஆரம்பித்தார். யாரும் அசைந்து கொடுப்பதாக தெரியவில்லை. இதை ஒரு மானப் பிரச்சினையாகவே எடுத்து கொண்ட வெங்கட்ராமன், "முதல் நாலைந்து பெஞ்சுலே இருந்து தான், சத்தம் வந்துச்சு . இன்னைக்கு இதை சொல்லலைனா இது தாண்டா நான் உங்களுக்கு

எடுக்குற கடைசி கிளாஸ். ஹெட்மாஸ்டர கூப்பிட்டு வந்து எல்லாருக்கும் டி.சி கொடுத்துட்டு தாண்டா மறு வேலை" என்று மிரட்ட ஆரம்பித்தார். பக்கத்தில் இருந்த கோபாலகிருஷ்ணன் நெளிய ஆரம்பித்தான். என்னிடம் மெதுவாக, "சொல்லிடலாம்டா " என்றான். எனக்கு அருகில் இருந்த ராஜாராமனிடம் நான் மெதுவாக, "இவன் சொல்லுவேங்குறான் டா " என்றேன்.. "எட்டப்பன் பரம்பரையா இருக்கும். நம்மள பத்தி தெரியாது போல" என்று கண்களை உருட்டி ராஜாராமன் சொன்ன விதத்தை பார்த்து எனக்கே பயமாய் இருந்தது. நடுங்கி போன கோபால் வாயே திறக்கவில்லை. நேரம் கூட கூட, வெங்கட்ராமன் சாரை பார்க்கவே பரிதாபமாக இருந்தது எனக்கு. வியர்த்துக்கொட்டி, கண்கள் எல்லாம் சிவந்து, இனியும் தாமதித்தால் பி.பி எகிறி ஏடாகூடமாகி விடும் என்று உணர்ந்த நான், என்னவானாலும் சரி என்று எழுந்து "நான் தான் பாடினேன்" என்றேன்.

அவர் என்னை நெருங்கிய வேகத்தை பார்த்தே, சரி இன்றோடு நாம் காலி என்று கண்களை மூடிக்கொண்டேன். பளார்,பளார் என்று அறையும் சத்தம். என்ன இது வலிக்கவே இல்லை என்று மெதுவாக கண்களை திறந்து பார்த்தால், வெங்கட்ராமன் சார், கோபாலகிருஷ்ணனை பந்தாடி கொண்டு இருந்தார். ஏன்டா.. எவ்வளவு நாழிய கேட்குறேன். பக்கத்துலே உள்ளவன் சொல்லுங்கன்னு.. கூட்டுக்களவானியா பண்ணறீங்க? என்றபடி, அவனை அறைந்த அறையில் கன்னங்கள் இரண்டும் பலூன் போல உப்பி கொண்டது கோபாலுக்கு. அந்த சம்பவத்திற்கு பிறகு அவன் அவசரமாக இடத்தை மாற்றி கொண்டு வேறு பெஞ்சுக்கு சென்றுவிட்டான். பள்ளி முடிக்கும் வரை என் பக்கமே வரவில்லை.


வெகு நாட்கள் கழித்து கோபாலகிருஷ்ணனை, ப்ராஜெக்ட் விசயமாக சிங்கப்பூர் சென்றபோது முஸ்தபாவில் சந்திக்க நேரிட்டது. நன்றாக பேசிகொண்டிருந்தவன், தனது கன்னங்களை அழுந்த துடைத்தப்படி உணவருந்த வீட்டிற்கு அழைத்தபோது, ஏனோ எனக்கு பழைய நினைவுகள் வந்து, அவசரமாய் மறுத்து விட்டேன்.

இப்படியாக நாங்கள் பத்தாம் வகுப்பு வந்த போது, ஏற்கனவே இரண்டு வருட குத்தகையில் அங்கிருந்த ராஜேந்திரன், எங்களுடன் சேர்ந்து மூன்றாம் வருடத்தை தொடர்ந்தான். பத்தாம் வகுப்பு வரை , மாணவர்களுக்கு அரைக்கால் சட்டை தான். +1 போன பிறகுதான் பேன்ட். இது எங்களை போன்ற சராசரி உருவம் கொண்டவர்களுக்கு பெரிய பிரச்சினையாக இருந்ததில்லை . கடைசி பெஞ்சு வளர்ந்த பசங்களுக்கு இது பெரிய மானப் பிரச்சினை . அருகில் இருந்த கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன், அப்போதே பனை மரத்தில் பாதி இருப்பான். ஊரில், நல்லது கேட்டதுக்கு அவனிடம் வந்து ஆலோசனை கேட்கும் அளவுக்கு வளர்ந்து இருந்த ராஜேந்திரனுக்கு, பள்ளி பாடங்களை விட பெரிய தொல்லையாக இருந்தது இந்த அரைக்கால் சட்டைதான். அரை டிராயர் போட்டு, மேலே லுங்கியை சுற்றி கொண்டு வந்து, பள்ளிக்கு முன் இருந்த இந்தியன் பேங்க் வாசலில் லுங்கியை கழட்டி பையில் வைத்து கொண்டு பள்ளிக்குள் நுழைவான் ராஜேந்திரன். வகுப்பில், நாங்கள் அடிக்கும் ஜோக்ஸ், பேசிக்கொள்ளும் கதைகள் எதிலும் அவனுக்கு நாட்டம் இருந்ததில்லை. அவனுடைய ஆழ்ந்த அனுபவத்திற்கு முன் அவை எல்லாம் சிறுப் பிள்ளை தனமாகத்தான் தெரிந்து இருக்கும். பத்தாம் வகுப்பை தாண்டமாட்டேன் என்ற ராஜேந்திரனின் பிடிவாதமா , மகனை பாஸ் செய்ய வைத்து ஒரு IPS, IAS ரேஞ்சுக்கு ஆக்கி காட்டுவேன் என்கின்ற அவனது தந்தையின் பிடிவாதமா ? வென்றது எது ? முடிவை பரீட்சை பேப்பரில் காண்க! என்ற ரீதியில் இது தொடர்ந்தது . எல்லாருக்கும் டெர்ரர் ஆக இருந்த ராஜாமணி சாருக்கே, ராஜேந்திரனை பார்த்தால் ஒரு கிலிதான். "பாத்தா ரெண்டு புள்ளை பெத்தவன் மாதிரி இருக்கான் . அவனை எப்படியா அடிக்கிறது என்பார்.

அவன் பள்ளிக்கு வருவதே , வகுப்பு இருக்கும் இடத்தை நியாபகபடுத்தி கொள்ளத்தான். ஒருவழியாக, பத்தாம் வகுப்பு பொது தேர்வு வந்தது. கடைசி பரிட்சையான சமூக அறிவியல் முடிந்த அன்று, அனைவரும் ஒரு வித கொண்டாட்ட மனநிலைக்கு தள்ளப்பட்டனர். இவை எவற்றிலும் கலந்து கொள்ளாத ராஜேந்திரனோ ஒரு பெரிய கல்லை கட்டிடத்தின் உச்சியை நோக்கி எறிந்து விட்டு திரும்பி பார்க்காமல் வெளியே நடந்தான்.

# Eco Friendly Power

**D**uring my childhood I've read story of a Genie that should be kept busy else it will finish our life. It is a very good story that I could relate with the current nuclear power reactors. Nuclear reactors are good and friendly until they meet a mishap, once met we can't even go near them, more importantly we can't even just abandon them.



The era of Nuclear reactors could be classified as Before Fukushima and After Fukushima. Even though Three Mile Island (1979) and Chernobyl (1986) were Fukushima's immediate predecessors in terms Major nuclear incidents, Fukushima (2011) nuclear disaster has prompted to rethink of nuclear energy policy in many countries.

Germany decided to close all its reactors by 2022, and Italy has banned nuclear power. Following Fukushima, the International Energy Agency halved its estimate of additional nuclear generating capacity to be built by 2035.

Ok lets consider various source of power generation [other than Nuclear] at a high level.




**Fossil:** Do you know Coal, Petroleum or Natural Gas power generators could cause hazardous impacts that are equally dangerous as Nuclear power? "Coal fired power plants are the single largest stationary source of pollution in any country. The toxins this coal fired power plants produce severely damage both human health and the environment and contribute to a reduced quality of life. Greenhouse gas emissions result from fossil fuel based electricity generation.

## How about the renewable power sources?

**Hydro Electricity**: It is hard to digest that Hydroelectricity could cause ecosystem damage and loss of land. Large reservoirs required for the operation of hydroelectric power stations result in submersion of extensive areas upstream of the dams, destroying biologically rich and productive lowland and riverine valley forests, marshland and grasslands. The loss of land is often exacerbated by the fact that reservoirs cause habitat fragmentation of surrounding areas.






**Wind energy** is not enough to feed our need. Additionally it requires huge real estate and it cannot sustain the amount of power thus generated. However this is also impacting the ecology. A study estimates that wind farms are responsible for 0.3 to 0.4 fatalities per Giga Watt-hour (GWh) of electricity generated. Additionally the most obvious problem is the noise pollution. The wind turbine syndrome also includes sleep problems, irritability, and depression

**Solar,** this is one of the most prospective areas where in we can generate power without any or very less ecological impact. If we think so we are mistaking. Solar energy could cause fire hazard, biodiversity hazard and human hazard. It's easy to think that solar panels can do no wrong— after all, they will help lead us out of our energy crisis, right? Unfortunately, these shining beacons of hope produce toxic e-waste just like cell phones, TVs, and computers.




There are other renewable sources such as Agricultural biomass, Geothermal, Tidal.

Now which source of energy is Safe and eco friendly? This is far difficult than electing the right lawmakers. Scientists and big corporations that employ them, stand to profit greatly by highlighting the benefits of sources that they propose to be safe. Hence no wonder they try to hide the dangers of the technology and suppress any open discussion of them.

Each source of energy has its own risks and of course every technology has risks. We might be willing to tolerate some small risk—if solar energy really represented a permanent solution to our energy problems. However that is not the case. At best, solar energy is only a temporary band-aid. Recent calculations indicate that the "Sun Will Go Out in a Billion Years As Its Fuel Runs Out". As that calculation was made about 15 years ago, we now have only nine-hundred ninety-nine million, nine-hundred ninety-nine thousand, nine-hundred and eighty-five years left during which we could use solar energy. Wouldn't it be better to put our human resources and scientific brains to work to find a safer and more permanent solution to our energy needs?

**Conclusion**: If you know what are the risks of the technology and have a clean disaster recovery/management plan then any source of energy is safe. However we could minimize the impact by optimally using the electricity only where and when required. Exorbitant utilization of energy leads to wastage of the resources and cause serious side effects.

**Narayanan Ravichandran**

# ஏதற்கும் தயாராய் இருப்போம்

2010 மார்ச் 11ம் தேதி உலக வரலாற்றில் ஒரு மறக்க முடியாத நாள். ஜப்பானிய மக்கள் மட்டுமல்லாது ஜப்பானில் வாழ்ந்து வந்த அனைவரின் வாழ்வையும் கணவுகளையும் உறுக்குலைத்த சம்பவம் நடந்தது என்பதையும் மறுக்க முடியாத நாள்.

ஆம், அன்று நன்றாகவே பொழுது விடிந்தது. கடைகள், பள்ளிகள், அலுவலகங்கள், இரயில்கள், பேருந்துகள் என அனைத்து சேவைகளும் இனிதே தொடங்கி செயல்பட்டுக் கொண்டிருந்தன. நானும் டோக்கியோவின் ஒரு பகுதியில் வழக்கம் போல் அலுவலகத்தில் எனது வேலைகளில் கவணம் செலுத்திக் கொண்டிருந்தேன். அன்று வெள்ளிக்கிழமை அதுவும் பிற்பகலாதலால் அனைவரின் முகத்திலும் ஒரு குதூகலம். தமக்கு அளித்த வேலைகளை விரைவாக முடித்துவிட்டு வீடு திரும்புவதற்கு அனைவரும் போட்டி போட்டுக்கொண்டிருந்த அதே வேளையில்.....

டோக்கியோவிலிருந்து சுமார் 300 கி.மீ.க்கு அப்பால் கடலில் 32 கி.மீ. ஆழத்தில் இரண்டு பூமித்தகடுகளும் முட்டி மோதிக்கொண்டிருந்தன. சரியாக பிற்பகல் 2:46 மணிக்கு மோதிக்கொண்டிருந்த தகடுகளில் ஒன்று, மற்றொரு தகடிடமிருந்து விடுபட்டுக்கொண்டது. ஆம், உலகின் மிகப்பெறிய நிலநடுக்கங்களில் ஒன்று ஆறம்பம் ஆனது. இதன் விளைவாக ஏற்பட்ட அதிர்வு விரைவாகப் பல நூறு கி.மீ.க்குப் பரவத்தொடங்கி, பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலும் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கத்தின் விளைவாக, 'சுணாமி' எனப்படும் ஆழிப்பேரலை உறுவாகி நிலத்தை நோக்கி விரைந்து வரத்தொடங்கியது. மிகச்சிறந்த தொழில் நுட்பங்கள் கொண்ட ஜப்பானில், இந்த அனைத்து நிகள்வுகளையும் நொடிப்பொழுதில் உணர்ந்து வானொலி, தொலைக்காட்ச்சி, பொது அறிவிப்பு ஊடகங்கள், தொலைபேசிகள் என பலப்பல வழிகளில் மக்களுக்கு எச்சறிக்கை விடுத்துக் கொண்டிருந்த அதே வேளையில்.....



விஜயராகவன்

இங்கு டோக்கியோவில் எனது வாழ்க்கையில் சில முக்கியமான பாடங்களை, அதுவும் நேரடி அனுபவம் மூலம் கற்றுக்கொள்ளத் தொடங்கினேன். ஆம், 'Crisis Management' எனப்படும் 'நெறுக்கடி நிற்வாகத்தின்' கீழ் வரும் நான்கு நிலைகளையும் தெறிந்துகொண்டு, கற்றுக்கொள்ளக்கூடிய நேரம் வந்தது.

**1. Prevention** - வருமுன் காத்தல்:

மனிதனால் தெறிந்து கொள்ளப்பட்ட அல்லது மனிதனின் சக்திக்குட்பட்ட விஷயம் என்றால் வருமுன் காப்பதற்கான வழி முறைகளை அறிந்து கொண்டு, வருவதைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கலாம். ஆனால், மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயமாக இருந்தது இந்த நிலநடுக்கமும் ஆழிப்பேரலையும் ஆகையால் அதைத் தடுக்க முடியாமல் போனதைப் பற்றி ஆச்சர்யப் படுவதற்கோ ஆதங்கப் படுவதற்கோ ஒன்றும் இல்லை.

**2. Preparedness** - தயார் நிலையில் இருத்தல்:

நிலநடுக்கமும் ஆழிப்பேரலையும் ஜப்பானுக்குப் புதிதல்ல. ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாய் இயற்கையின் சீற்றதிற்கு ஆளாகியும் அனுபவித்தும் வரும் நாடு என்பதால் இயற்கை சீற்றத்தைத் தடுக்க முடியாவிட்டாலும் சீற்றம் வந்தவுடன் செய்ய வேண்டியவைகளை எப்பொழுதும் தயார் நிலையில் வைத்துள்ளார்கள்.

ஜப்பானிய மொழியில் 'ஷின்கான்சென்' அல்லது ஆங்கிலத்தில் 'Bullet Train' என்று கூறப்படும் அதிவேக இரயில் வண்டிகள் நிலநடுக்கம் ஏற்பட்டால், தானியங்கி முறையில் உடனே நிற்கும் தொழில்நுட்பம் ஒருபுறம், ரிக்டர் அளவுகோளில் 7.4 வரை நிலநடுக்கம் ஏற்பட்டும் சிறு சேதங்களுடன் நிமிர்ந்து நின்ற கட்டிடத் தொழில்நுட்பம் ஒருபுறம், இயங்கிக்கொண்டிருந்த அனு உலைகளும் தாமே நின்றுவிடக் கூடிய யுக்தி ஒருபுறம் என்று கூடுமான வரையில் தங்கள் நாட்டின் உள்கட்டுமாணத்தை தயார் நிலையில்தான் வைத்திருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் கட்டிடங்களுக்கு செல்லும் நீர் குழாய்களும் எரிவாயு குழாய்களும் கூட சில மணிநேரம் தாமே மூடிக்கொண்டதாகக் கேள்வி.

இதற்கெல்லாம் மேலாக, மனித உயிர்க்கு முக்கியத்துவம் கொடுத்து இயற்கை சீற்றத்தை உணர்ந்த அடுத்த கணமே கைத்தொலைபேசிகளுக்கு எச்சறிக்கை சமிஞ்சை அனுப்பக்கூடிய தகவல் தொழில்நுட்பம் தயார் நிலையில் இருந்ததால்தான் பல்லாயிரம் மக்கள் உயிர் பிழைக்க முடிந்தது.

**3. Response** - செயல்படுதல்:

கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு நாடே ஒரு புறம் ஸ்தம்பித்து நின்றபோது, நாட்டு மக்களும் அரசாங்கமும் நிலையை உணர்ந்து உடனே செயல் படத்தொடங்கினார்கள்.

**4. Recovery** - மீள்தல்:

விஜயராகவன்

# Automobile World

Automobile, from a friendly wagon has grown into a necessity and comfort like mobile phones. One of my senior friend mentioned that every Indian just arrived Tokyo looks for a car more than an apartment. It is true that owning a car in japan makes life comfort though train/ bus serves the purpose.

Human kind has evolved many iterations to reach where we are today. There was an age when technocrats were focused on fuel efficient engines. Concept of using battery in commercial vehicle as wagon propeller has brought another revolution. Almost every OEMs now has a Hybrid engine variant for each model released in the market.

Apart from Speed, the latest vehicles are designed to meet the various universal regulations like USNCAP,JNCAP,EuroNCAP and many more.[NCAP- New Car Assessment Program]. These regulations were established for the safety of the people inside and outside the car [Pedestrian Safety]. Also concept of ZERO emission is becoming the trend in the market to pass the CO2 emission protocol. Based on the performance of each car, the governing body awards star rating to car. This is becoming a Unique Selling Point for the car which helps consumer decision apart from Appearance, interior room space, cost, mileage, etc.

Just a few Interesting technologies conceptualized and/or started in production in matured markets



- JOY STICK steering wheel like in Airplane.
- ASL [Accelerated Speed Limiter] switches helps the steering to control the speed [Acceleration] of the car based on the sensor identification of objects in proximity.
- Gear changing axle has now come with buttons and to be changed to touch screen.
- More touch screen functionality in interior and exterior of the car. [ E.g.: Door opening/closing ]
- An automated valet parking will automatically park the vehicle. We can be picked up at designated area using smart phone instructions.

With every passing year, Automotive world is unfolding various advanced technologies to the customer delight and safety. Future is not far from having Space car in reality!!!!!.

Abavankar R

# Formula One [F1 Race] in India

When we think of Formula One, First thing that comes to our mind is the speed of this game. For all those who loved to follow these Formula one racing event, it is dream come true to watch this exciting event in our own facility starting October 2011.

2011 is a special year for us to inaugurate our own Formula one track in India. This important milestone will bring in more technologies and champions in the ever growing automobile industry in India. It's a great pride to provide the platform for our budding champion like Narain karthikeyan.

A quick walk of history on this F1 racing says that in 1906 first race was held in France featured 32 cars on a 105 KMS course near Le Mans and took two days to complete. The average speed of the winning car, a Renault driven by Hungarian Ferenc Szisz, was 101 KMPH. Today, the F1 cars can reach a speed of 320 KM/H close to the speed of Shinkansen train. And can clock a circuit of approximately 300 KMs [5 Kms * 60 Laps] in 1:30:35.002. [ One hour 30 minutes 35 seconds and 2 milli sec].




On 30th October 2011, for the first time in india F1 race was held in Buddh International Circuit in Greater Noida, Uttar Pradesh. The only Indian F1 driver Narain Karthikeyan finished 17th position. In Coming years, we will see more such home grown talented young to complete in this race.

Let's start enjoy this game of speed, thrill, excitement, technology in our own country.




Abavankar R




WITH BEST COMPLIMENTS ON THE
TOKYO PONGAL CELEBRATIONS 2012

## SHRI GEMS

**Shrikant Shah**

Tel: 03-3839-5991

Email: shrikantshrigems@gmail.com

Tender Hearts International School




Tender Hearts International School is serving the International community in Kawasaki and nearby areas. Tender Hearts International School is primarily focused on the Kindergarten education for the children – catering to the age groups of 2 to 6 years old. It is established under Kawasaki Kokusai Ippan Shadan Houjin and is a city notified school. The details are available at : www.tenderhearts.jp


# ENCHANTING LUNA

**Vanisree Vairavan**

**When I was thinking about an astronomical topic for this year's Pongal Malar, I saw the beautiful full moon shining up in the sky, inspiring me to write about it. Moon or Luna as called in Latin, has been admired by we humans for thousands of years for its beauty. Luna appears in countless poems, stories, fairytales and off course in our affection filled lullabies.**



Apart from its beauty, Luna has many more reasons to be admired for. Moon has played a major role to make our exotic Earth what it is today! To start with, a snapshot of how Moon was formed 4 and a half billion years ago a huge planet Orpheus, struck the earth in its formation stages and blew away parts of earth. The debris of the collision rotated around the earth and later collected together to form the Moon! Moon started rotating around the earth because of the gravitational pull.




Our earth was rotating at high speed when it was formed. 1 rotation took a mere 8 hours, but after the formation of moon, earth's speed started reducing.

Moon's gravity tries to pull everything on earth towards it, & the earth's gravity tries to pull it back. In this push & pull only, the water in the oceans and seas move, creating tides. The tides created by moon are reducing earth's rotation speed and now we have a day of 24 hours.

The earth's axis tilted by the bang which created moon. The moons gravitational pull is maintaining earth's axis tilt at a constant 23°and it is because of this tilt we have seasons. The seasonal changes were the major reason for formation and fast development of life on earth. In other words, we all are here today because of the moon!! Have you ever wondered, What life would be like, if we had no moon? When you are on your way home, Look up at the sky tonight and think, What, if we had no moon?"

Earth's axis will change and it will start wobbling like a top. This would alter the distribution of sunlight across earth & damage its weather balance. North and South pole will turn into vast desserts and tropics will freeze. Earth will start rotating very fast than it does now, leading to strong winds & restless oceans, devastating everything. Eventually life on earth will cease. We are lucky that Luna exists and in turn is allowing life to exist on earth.

But, studies have shown that the tidal activity is slowly drifting the moon away from us. When formed, it was just 14000miles away from earth, but now it is 234000 miles away. Luna is fast receding at a speed of an inch and a half per year! It would probably take 500 million years or a bit longer for the moon to go away from us. Till then let's all cherish our Enchanting Luna, and treasure our own planet Earth, the solitary dot of blue in the known universe.

Let's all do little things every day, like, recycle our garbage or grow tree etc and save our planet Earth, Our Blue marble from being destroyed even before Luna desserts us.



# Windmills

**Windmills are machines which uses wind to turn things. Windmills were first made in Persia. Then they became very famous in Europe.**



Netherland is called as the Land of Windmills.

In olden days people in Netherland used it for corn grinding, cutting wood and pumping water.

Windmills were also used for building ships and made the country very powerful.

Now a days windmills are used to make electricity. But the windmill stops if there is no wind.

Many windmills are kept in sea and desserts to make lots of electricity.



Windmills are very good because they don't pollute.

## Karthik Vairavan, 6 years

# Janani M, 5 Years

What I learned from mahabharatham.

1 I learned we sholde not hurt athers.

2 we sholde not kill athers.

3 we sholde not laugh when athers fall.

4 we sholde share.

5. We sholde help athers.

M. Janani 5 yers


**Wishing you all a Happy Pongal**

**With best Compliments from**

Bank of India
*Relationship beyond banking*

**Bank of India**
**Mitsubishi Naka Dori Building,**
**2-2-3 Marunouchi, Chiyoda-ku,**
**Tokyo 110-0005**

# PAINTING Corner

## Anusha 6 years




## Ayush Chandan 5 years



# Dyuti Iyer 8 years






# Varna 4 years




# Varna 4 years



**மகன்** : அப்பா! எங்க பாடப் புத்தகத்திலே தப்பு தப்பா போட்டிருக்குப்பா..

**அப்பா** : அப்படி என்னடா தப்பா போட்டிருக்கு?

**மகன்** : அப்பா வேலைக்குச் செல்வார், அம்மா சமைப்பாள்னு போட்டிருக்குப்பா!

**மகன்** : அப்பா ஒண்ணு பெரிசா? முப்பது பெரிசா?

**அப்பா** : என்னடா சந்தேகம்.... முப்பதுதான் பெரிசு.

மகன் : நான் முப்பதாவது ராங்க் வாங்கியிருக்கிறேன் பா!

**டீச்சர்** : இந்தியாவிலே பெட்ரோல் எங்கெல்லாம் கிடைக்கிறது?

**மாணவன்** : எல்லா பெட்ரோல் பங்கிலயும் கிடைக்குது டீச்சர்!

**நபர் 1** : மனுஷனா பொறந்தா, சாதிக்கணும்!

**நபர் 2** : அப்பாடா! நான் கொழந்தையாத்தான் பொறந்தேன்!

**குட்டி மீன்** : சாப்பாடு இல்லை.. காதல் இல்லை... பிறப்பு இறப்பு கூட இல்லை.... சே! என்ன குளம்மா இது?

**தாய் மீன்** : உஷ்! நாம இருக்கிறது ஸ்க்கிரீன் சேவர்ல!

தந்தை, **மகனிடம்**... : நீ வலை பின்னுரதெல்லாம் சரிதான்.... ஆனா, அதுக்காக வெப் டிசைநர் வேலைக்கு அப்ளை பண்றதெல்லாம் டூ மச்!

**காதலன், காதலியிடம்** : டாக்டர் சொல்லி விட்டார்! என் இதயம் ரொம்ப பலவீனமாம். பிழைக்க இரண்டே வழிகள் தான் இருக்கிறதாம்.. ஒன்று...ஐ ஸீ யூ மற்றொன்று.... யூ ஸீ மீ

**நபர் 1** : அதிக சொத்துள்ள நாடு எது?

**நபர் 2** : நீயே சொல்லு

**நபர் 1** : "ஆஸ்தி" ரேலியா

**மகள்** : அப்பா, உங்களால் இருட்டில எழுத முடியுமா?

**அப்பா** : முடியுமே..

**மகள்** : அப்போ லைட் ஆஃப் பண்றேன், பிராக்ரஸ் ரிபோர்ட்ல கையெழுத்து போடுங்க பார்ப்போம்!

டீச்சர் : ராமன், ராவணனை அம்பெய்தி கொன்றான், இது என்ன காலம்?

மாணவன் : துப்பாக்கி இல்லாத காலம்!

கணவன் : ஹலோ டியர், என்ன பண்ணிட்டு இருக்கே?

மனைவி : ம்.... ஐ ஆம் டையிங்....

கணவன் : ஹய்யோ டியர், நீ செத்துப் போயிட்டா, நான் என்ன பண்ணுவேன்?

மனைவி : நான்சென்ஸ்! முடிக்கு டை அடிச்சுட்டு இருக்கேன்யா!

நீதிபதி : ஏம்பா! அந்த ஆளை வேணும்னே கத்தியால குத்திக் கொன்னியா?

குற்றவாளி : இல்லே சாமி... வேணாம்னுதான் குத்திக் கொண்னுட்டேன்!

**ஆசிரியர்** : லெக்சரர்க்கு தமிழில் என்ன சொல்லணும்?

மாணவன் : பிரசங்கி !

**ஆசிரியர்** : அப்போ புரொபஸருக்கு என்ன சொல்லணும்?

**மாணவன்** : அதிகப்பிரசங்கி!!

# ரூபாயின் மதிப்பு

பன்னீர் செல்வம் தர்மலிங்கம்

"பணம் பத்தும் செய்யும் , பாதாளம் வரை பாயும்"

"பணத்தை பார்த்தால் பிணமும் வாயை திறக்கும்" என்ற பல பழமொழிகள் உண்டு....

**பணம்**



என்னை ருபாய் என்பார்கள் !!

டாலர் என்பார்கள் !!

யுரோ என்பார்கள் !!

பல வடிவங்களில் உளாவருபவன் நான் !!

எல்லா இடங்களிலும் இருப்பவன் நான் !!

பல பெரிய மனிதர்களின் உருவங்களை என்னக்குள் கொண்டவன்!!

அதிகமானால் , பணக்காரன் என்பார்கள் !!

குறைவானால், ஏழை என்பார்கள் !!

ஏழை , பணக்காரன் என்ற பாகுபாடு மனிதர்கள் உருவாக்கியது, அதற்கு நான் காரணமல்ல !!

மனித வாழ்க்கையில் பணம் முக்கிய பங்கு வகிக்கிறது. சரி, பணம் உருவான தான் கதை என்ன ?

நம் முன்னோர்கள் பண்ட மாற்று முறையில், தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டார்கள். தங்களிடம் இருக்கும் பொருட்களை மற்றவரிடம் கொடுத்து , மற்றவரிடம் இருந்து தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொண்டார்கள் . இந்த விதமான பண்டமாற்று முறையில் பல சங்கடங்கள் இருந்துவந்தன .

பொருட்களை சுமந்து செல்லுதல் மற்றும் பொருட்களை அதிக காலங்கள் பாதுகாக்க வேண்டிய நிர்பந்தங்கள் இருந்தன. அது மட்டுமின்றி எளிதில் தேவைகள் பூர்த்தி அடைவதும் இல்லை. ஒருவர் தன்னிடம் இருக்கும் பத்து கிலோ கோதுமையிற்க்கு பதிலாக பசு மாடு வாங்க விரும்பினால் ,பசு மாடு விற்கும் ஒருவரை சந்திக்க வேண்டும் அது மட்டுமின்றி அவருக்கும் கோதுமையும் தேவை பட வேண்டும். இந்த விதமான கடினங்களை போக்குவதற்காக ஒரு பொது படையான பொருள் பணத்தை அறிமுக படுத்தினார்கள்.

ஆரம்பத்தில் நாணயத்தின் மதிப்பு தங்கம் மற்றும் வெள்ளியை சார்ந்தே இருந்தது அதாவது நாணயத்தின் மதிப்பு அரசாங்க கிடங்கில் இருக்கும் தங்கத்திற்கு இணையாக கருதப்பட்டது. முதன்முதலில் அமெரிக்கா தன் நாணயம் டாலரின் மதிப்பை தங்கத்திற்கு இணையாக வெளியிட்டது. நாடு விட்டு நாடு வர்த்தகம் செய்ய வேண்டிய காரணத்தினால் மற்ற நாடுகளும் அவரவரிடம் இருந்த தங்கத்தை பொருத்து தங்களின் நாணயங்களை மதிப்பிட்டர்கள்.இரண்டாம் உலக போருக்கு பின்னர் தங்கத்தை மூலமாக வைத்து நாணயத்தை மதிப்பிட்ட முறை செயல் இழந்து போனது. பின்னர் எல்லா நாடுகளும் அமெரிக்க நாணயத்தை மூலமாக வைத்தே மதிப்பிட தொடங்கினார்கள்.

நம் தாத்தா , பாட்டி காலத்தில் (1957 முன்னர்) ரூபாவில் பல காசு முறைகள் இருந்து வந்தன

1 தம்மிடி = 01/12 அனா

1 கனி = காலனா (1/4 அனா )


1 பரக்கா = அரன்னா (1/2 அனா )

1 அனா = 6.25 நயா பைசா

1 ருபாய் = 100 நயா பைசா

அப்பொழுதெல்லாம் ஒரு காலனாவிற்க்கு ஒரு மதிய உணவை உண்பார்கள் என்று என் தாத்தா சொல்லி கேட்டு இருக்கிறேன் , ஆனால் இன்றோ இவ்வாறான காசு முறைகள் வழக்கத்தில் இல்லாமலேயே போயிற்று. பின்னர் காசு முறைகள் எல்லம் பைசா ( 5 , 10 , 25 , 50 ) மற்றும் ருபாய் தாள் முறையிலே பழக்கப்படுதப்பட்டன.என்னுடைய பள்ளி பருவங்களில்(1990 முன்னர்) 50 பைசா காசிற்கு காலை உணவை முடித்து விடலாம் , இப்போதெல்லாம் 5 மற்றும் 10 பைசா காசும் பழக்கத்தில் இல்லாமல் போயிற்று . விலை வாசி உயர உயர , விலைமதிப்பு குறைவான நாணயங்கள் தேவையின்றி போனது. இவ்வாறு அசுர வேகத்தில் உயர்ந்து போன விலை வாசிற்கு என்ன காரணம்? ரூபாயின் மதிப்பு குறைவதற்கான காரணம் எனன ?

ரூபாயின் மதிப்பு எவ்வாறு குறைந்தது என்பதை கிழே உள்ள படத்தை வைத்தே தெரிந்து கொள்ளலாம்




1952 இல் ஒரு டாலர் பெறுமானம் உள்ள அமெரிக்க பொருளை நாம் 5 ருபாய் கொடுத்து வாங்க முடிந்தது ஆனால் அதே பொருளை இன்று வாங்க வேண்டுமென்றால் 54 ருபாய் தேவைபடுகிறது. வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே வந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரூபாவின் மதிப்பு அதிகமடைய தொடங்கி பின்னர் சரிந்து இப்போது மிகவும் குறைந்த மதிப்பில் காணபடுகிறது

அடிப்படை காரணமாக கருதபடுவது "தேவை மற்றும் கொடுக்கும் தன்மை (Demand and Supply)".ரூபாயின் தேவை அதிகமானால், அதுனடைய மதிப்பு அதிகரிக்கிறது அதே போன்று தேவைகள், கொடுக்கும் தன்மையை விட குறையும் போது , அதனுடைய மதிப்பு குறைகிறது .

நம் பொருளாதாரம் நல்ல நிலையிலும், நம் வணிகம் நல்ல பலனை ஈட்டும் போது அந்நிய முதலீட்டாளர்கள் நம் நாட்டில் முதலீட்டை அதிகரிக்கிறார்கள் , அதாவது அவர்களுடைய நாணயங்களை விற்று ரூபாவை வாங்கி முதலீடு செய்கிறார்கள் இதனால் ரூபாயின் தேவை அதிகரித்து அதிக மதிப்பும் பெறுகிறது . பொருளாதாரம் வலுவிழக்கும் போதும், அந்நிய நாடுகளில் நெருக்கடிகள் ஏற்படும் போதும் (ஐரோப்பிய நெருக்கடிகள்) அவர்கள் இந்தியாவில் இருந்து முதலீட்டை திரும்ப பெறுகிறார்கள் அதாவது அதாவது ரூபாயை விற்று அவர்களுடைய் நாணயங்களை திரும்ப பெறுகிறார்கள் இதனால் ரூபாயின் மதிப்பும் குறைகிறது.

மற்றொரு முக்கிய காரணம் நடப்பு கணக்கு பற்றாக்குறை (current account deficit) அதாவது ஏற்றுமதிகள் குறைந்து , இறக்குமதிகள் அதிகரிக்கும் நிலை. இந்தியா துணி , தோல் , ரசாயனம் போன்ற பொருள்களை ஏற்றுமதி செய்கிறது , அதே சமயத்தில் பெரும் அளவிலான எண்ணைய் போன்ற பொருள்களை இறக்குமதி செய்கிறது , தற்போதிய நிலவரப்படி இந்தியாவின் நடப்பு கணக்கு பற்றாக்குறை 16.9 பில்லியன் டாலராக இருக்கிறது. அந்நிய முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய தயங்குகிறார்கள் . இவையெல்லாம் ஒரு சில காரணங்களே.



பொருளாதாரம் முன்னேற்றமடைய, நாடு வளம்பெற நாம் ஒன்றாய் பாடுபடுவோம்!!

வாழ்க இந்தியா !! வளர்க பாரதம் !!

**பன்னீர் செல்வம் தர்மலிங்கம்**

# POOR CHILDREN



Have you ever seen children on the street asking for money or food? It's a rare sight in Japan but it is common in many other countries. There are a lot of children who can't afford food. They may have either lost their parents or they don't have money. Some children do dangerous or hard work to earn money. Child labor is still prevalent in many countries. Children are forced to work for about 14-16 hours a day.

In Pakistan some children work in a carpet factory. Many children get hurt by doing these jobs. In many parts of Africa, children fight for the army. In Cameroon, children spray poisonous fertilizers without proper protection. There are many more of such examples. They only get 50 Yen every day by doing hard and dangerous work. One in six children are child laborers.

Did you know that 60% of the poor children die because of hunger? 1 poor child dies every 5 seconds, about 700 every hour, 16,000 every day and about 36 million every year. More than 183 million children weigh less than they should.

Could you think of going to bed hungry every day? Before you throw away food, think about the people who can't ever afford to eat anything. And if you throw away food or do any bad things like that, you are mentally poor.

**NISHAD GOVINDARAJAN**




# நானா குஸா கையூ (Nana Kusa Kaiyu)

(ஏழு புற்கள் கஞ்சி) ஜப்பானில், டிசம்பர் மாத நடுவிலிருந்தே 'போனென் கை' (Bonen Kai) ஆரம்பித்துவிடும். பார்ட்டி, பார்ட்டி என்று தினமும் வகை வகையான உணவு. கிறிஸ்மஸ் பண்டிகை நாளில் கேக் வகைகளும் சேர்ந்து இன்னும் கொஞ்சம் கலோரி ஏறும். அதற்கப்புறம் புது வருடப்பிறப்பிலிருந்து மறுபடியும் தினமும் விருந்து சாப்பாடு. இதெல்லாம் செமிக்க வேண்டுமே? அதற்காக ஜப்பானிய மக்கள் ஜனவரி 7 ஆம் தேதி, அதாவது முதல் வார முடிவில் இந்த நானா குஸா கையூவை சாப்பிடுகிறார்கள்

நானா குஸா என்பது ஏழு வகையான புற்கள். (மூலிகை மாதிரி?) இதை சாதத்தில் கலந்து, சாப்பிட்டுக் களைத்த வயிற்றை சரி செய்துகொள்கிறார்கள். நாம் தீபாவளி லேகியம் சாப்பிடுவது மாதிரி தான். இந்த புற்கள் சூப்பர் மார்க்கட்டில், ஒரு பாக்கெட்டில் கிடைக்கும். காய்கறி இருக்கும் இடத்தில் வைத்திருப்பார்கள். இதன் செய்முறை: நானா குஸா - 1 பாக்கெட்

அரிசி - 2 கப்

தண்ணீர் - 7 கப்

உப்பு - சிறிதளவு

சோயா ஸாஸ் - சிறிதளவு

**ஸரஸ் ஜீவானந்தம்**

புற்களை ஒரு சிட்டிகை உப்பு சேர்த்த கொதிக்கும் நீரில் மிக லேசாக வேகவைத்து எடுத்துக்கொள்ளவும்

அரிசி 1 கப், தண்ணீர் 7 கப் என்கிற விகிதத்தில் ஒரு பாத்திரத்தில் அடுப்பில் வைத்து, கொதிக்க ஆரம்பித்ததும் தீயை மெல்லியதாக்கி 30 - 40 நிமிடங்கள் வேகவைக்கவும்

நானா குஸா, சிறிதளவு உப்பு, சோயா ஸாஸ் சேர்த்து, நன்றாக வெந்து கஞ்சி பதம் வந்ததும் இறக்கவும்.

(நம்ம நாக்குக்கு இது சரிப்படவில்லை என்றால், ஒரு பச்சை மிளகாயை தாளித்து சேர்க்கலாம்!)

“இந்த கையூவை சாப்பிட்டுப் பார். வயிறு லேசாகிவிடும்; உடம்பு கல கலவென்று ஆகிவிடும்,” என்கிறாள் என் ஜப்பானிய தோழி.

**Jyotsna Muralidharan (7 years)**





**Pongal 2012 was brought to you by the efforts of the following families**

| | |
|---|---|
| Abayankar | Vinnamoor Murali |
| Govindarajan | Narayana Iyyappan (Prakash) |
| Gowrishankar | Natarajan |
| Hari Narayanan | Panneer Selvam |
| Jeevanandam | Ramanathan |
| Lakshmi Narayanan | Sharavanan |
| Murali Manikandan | |

**The cultural programs were coordinated by Mrs Valli Murali**

இந்த பொங்கல் மலரையும் விழாவையும் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நம் மனமார்ந்த நன்றி


## Acknowledgements and Notes

**We wish to thank the contributors of the articles and pictures for their enthusiasm and effort.**

| | |
|---|---|
| **Cover picture:** | **Pongal 2012 Welcome entrance** |
| **Front Inside Cover:** | **Mansi Natrajan** |
| **Back side Cover:** | **Jyotsna Muralidharan** |
| **Edited by:** | **S Murali Manikandan, Narayana iyyappan(Prakash)** |
| **Design Support:** | **Aniruddha Mohanagopal** |
| **Published by:** | **Lakshmi Narayanan, GunaShekar** |



*All articles, pictures and content within this brochure, unless stated otherwise, belong to the original authors.*

*Any republication of these without their written consent is prohibited*




முக்தி

தோன்றி அழிவது வாழ்க்கை – இதில்
துன்பத்தோ டின்பம் வெறுமையென் றோதும்
மூன்றில் எதுவரு மேனும் – களி
மூழ்கி நடத்தல் பரசிவ முக்தி.

**Reader's feedback**

**Please send your comments and feedback on Pongal 2012 Malar to pongaljp@yahoo.com.**

**If you wish to contribute for the next years' Malar 2013, Please send it by email as above.**

# Wishing You a Very Happy Pongal

*With best compliments from*

Infoview

Fueling Thought. Igniting Action.

Infoview Technologies Inc.

[http://www.ivtlinfoview.com](http://www.ivtlinfoview.com)
infoserv@ivtlinfoview.co.jp

**Japan Office**

No.7, Center Plaza, 6th Fl,
1-3-12, Nihombashi - Hamacho,
Chuo Ku,
Tokyo 103-0007,
Japan
Tel:+81-3-5822-6580

**India Office**

No 23 Pacifica Tech Park, 1st Fl,
Old Mahabalipuram Road,
Navallur,
Chennai - 603103,
India
Tel:+91-44-4742-3300

**Singapore Office**

111, North Bridge Road,
#27-01 Peninsula Plazza,
Singapore-179098.
Tel:+65-6559- 9207

**UK Office**

No.1 Olympic Way
Wembley, Middlesex HA9 0NP
United Kingdom
Tel : +44 -208- 782- 1169

**Infoview is celebrating 11th Anniversary in Japan.**


Jyotsna